12931, 3819

12931. திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர
ஸ்வாமி அஷ்டபந்தன
மகாகும்பாபிஷேக
வைபவச் சிந்து (1937)

3819. ஸ்ரீ இராமாயணச் சிந்து
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி லீலைக்
(கும்மி. (1912)

திரு ஆறுமுக நாவலரவர்கள் மாணாக்கரும்

தஞ்சை S. P. G. காலேஜ் தமிழ் பண்டிதருமாயிருந்த

ச. விசுவலிங்கம் பிள்ளை அவர்கள் குமாரர்

கருந்திட்டைக்குடி வித்வான்

வி. சாமிநாத பிள்ளை கொடுத்த

# சாற்றுக்கவி.

---

மேவு கயிலாய மெனப் பொலியு
மையாற்றுப் புனிதக் கோயில்
மேவு கும்பாபி டேகச்சி
றப்பெவையும் விளங்கச் சந்தப்
மேவு வணம்பாடி னன்றருமை
யாதீனக் கடலூர் தன்னில்
மேவு சராப்புசண் முகசுந்த
ரக்கவிஞன் நினைந்து மாதோ.

தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான

# திருவையாறு

ஸ்ரீதருமாம்பாள் ஸமேத ஸ்ரீபஞ்சநதீசுவரஸ்வாமி

ஆலய ஜீரணோத்தாரண அஷ்டபந்தன

# மஹா கும்பாபிஷேக வைபவச் சிந்து.

இஃது

தருமபுரம் ஆதீனம் சந்தக்கவிராயரும்,

திருக்கடவூர் தேவஸ்தானம் ஷராப்புமாகிய

மு. சண்முகசுந்தரம் பிள்ளை

இயற்றியது.

மாயவரம்

ஆனந்த ஸாகர பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

கண்ணாடி போலவே கட்டியிருக்கார் மேலே
ார்திரு மதில்பத்தி பக்கச் சன்னல் போலே
பாருல கிலேயென்று பாடவே தென்மேலே
பூர்த்தி செய்வித்து—தருமையில் வந்தநாள்
பார்த்தருள் பெத்து.

ண்ணருள் கொண்டுயர் சன்னிதான மான
சண்முக தேசிகர் சரணம் பணிந்து ஞான
ன்னு மடியாருடன் வந்து நடத்திக் தான
மற்றும் பலனளித்து மகிழும்படியுண் டான
வேண்டுத லேற்று—எழுந்தருளிப் புகழ்
பூண்டு வையாற்று—(கும்பா).

## ஸ்ரீ-ல-ஸ்ரீ சன்னிதானம் தருமபுரமிருந்து திருவையாற்றுக்கு எழுந்தருளியது.

## அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நமபுர மிருந்துவெழுந் தருளிதிருத் துருத்தியிலே
தங்கிப் பின்னுன்
நபுவனஞ் சார்ந்தங்கே சிலதினங்கள் தாமதித்து திவ்ய மாக
நமையுட னையத்தைப் பழுதுபார்த் தழகாக்க
ஆக்ஞா பித்து
ருமையுடன் வரவேற்கப் பேறுபெறும் கபிஸ்தலமே
பிறங்கிப் பின்னுள்

ளனைய காரியஸ்தர் மெய்த்திறத்த ரிருபுறமு மேவச் சக்ர
ளவட்டக் குடைபிடிக்க வந்தெவரும் கண்களித்து
மருவ வண்ட
ாளவொலி யினின்மேள வகையதிர்ப்ப வெற்றிதனைக்
குறிக்குஞ் சங்கெக்
ாமிக வொலித்திடவை யாற்றடைந்த தேசிகன்ருட்
கமலம் போற்றி.

ல்லாரும் பொழிற்றருமைச் சண்முகதே சிகஞான
சம்பந் தேசன்
)லாரும் [illegible]

மசாலொருங் குணம்வாது வார்தமிழ்தே வாரமுறை
சொல்லி யார்ப்ப
எல்லாருந் தனைப்பணிய எழுந்தருளி ஞானருளி
னெல்லை போல்வான்.

இப்பதியி னெய்தியபின் னெம்மியநா ரியம்பவிப்பில்
விருக்கு மென்று
மைப்புயல்பெய் ததுகண்டார் மாதெய்வப் பிறப்பெனவே
வெழுத்தி னார்கள்
முப்பழத்தி னுடனமுது முதல்வர்க்கு மடியவர்க்கும்
வழங்கி நாளுஞ்
செப்பருமகேச்சுரப்பூ சையும்புரிந்தி னருள்பெற்றுச்
சிறப்புற் றரே.

## ஸ்ரீ-ல-ஸ்ரீ சன்னிதானம் சத்த தலம்சென்று தெரிசித்து வந்தமை.

"கையற விலாதநடுக் கண்புருவப் பூட்டு". — (என்ற வர்ணமெட்டு)

சத்ததலஞ் சுவாமிபிர தக்ஷணமாய்ச் செல்ல— நம்
சன்னிதானம் பல்லக்குடன் பின்றொடர நல்ல
தத்தைபடர மும்பழனத் தாலயத்துள் மெல்ல—உள்
சார்ந்துபட்டிச் சாத்திதெரி சித்துப்போகச் சொல்ல [ளே

ஆற்றிலமர்ந் திருந்துசுவாமி அருகில்வரவைப் பார்க்க— பல்
ஆடிவதில் கூடுமடியார் பாடபமொலி யார்க்க [லக்
நாற்றிசையும் போற்றுதிருச் சோற்றுத்துறை கார்க்க—குரு
நாதனுடன் வந்தவர்கள் யார்க்கும்பசி தீர்க்க

வேதிகுடி சென்றுதிருக் கண்டியூரும் வந்து— கும்
விலக்கித்தெரி சித்துயர்பூந் துருத்தியிலே யிந்து [ல்ப
ஆதிசடை யிற்றரித்த அப்பனைப்ப ணிந்து— நா
ராயணக்குரு சாமிபடத்தி லன்றிராவி ருந்து

[ன்னும்
பூந்துருத்தி சுப்பிரமண்ய அய்யாகவி யானை—மெ
பிள்ளையுடன் வந்திருந்து புரிந்ததொண்டு வேண

ரோட்டுநெடுக கோஷ்டியாடும் பாட்டுக்கேட்டு வந்தார் [த
கபல பேர்களெல்லாந் தழுக்குடன்ப ணிந்தார்—அவர்
தங்களுக்குச் சன்னிதானங் கரத்தால் நீறுதந்தார். [கள்

திரண்டுங் கடந்துதிருநெய்த் தானத்தானைக் கண்டு—அந்த
அப்பனையும் மங்கையையு மடிபணிந்து கொண்டு [றுங்
திரண்டு புறமுமடியார் கூட்டமிகவு முண்டு—ஒன்
குறைவிலாது சேர்ந்தவிபரம் சொல்வதெனது தொண்டு.

## கும்பாபிஷேகச் சிறப்புரைத்தமை.

" கந்தரந் தொறுங்கிடந்து கந்தரம்பயந் தொதுங்க
கர்ச்சனை புரியுந்திறற் சிங்கமே ".—(என்ற வர்ணமெட்டு).

கண்ணக னுலகமதில் விண்ணவர்க ளும்புகழும்
புண்ணிய மிகுந்ததருமா புரம்— தன்னை
நண்ணியவருக்கு மகிழ்வாய் வரம்— தரும்
நாதசண்முக தேசிகக்குரு பாதபங்கய மேதுதித்துவை
யாற்றிமேல கும்பாபிஷேக வைபவம்— தனைச்
சாற்றியேவி லக்குவேனுன் செய்பவம்.

பைந்தலையப் பூகமரப் பாளையை யரவமென்று
பாய்ந்த மந்தி சாய்ந்துமன மேங்குமே— அதை
ஆய்ந்த றிந்து கொண்டுபின்னே வாங்குமே— மற்றும்
பற்பலத்தரு நிற்பதாலத னற்புதங்களை செப்ப நற்றமிழ்
பாவலர்கள் கல்விநல மோங்குமே— உயர்
காவிரிப்புனல் பரந்து தேங்குமே.

சங்கீதக் கடலெனவே யெங்கினும் புகழ்படைத்த
சற்குணத் தியாகராஜ மூர்த்தியே— அவர்
உற்பவித்த நற்றலத்தின் கீர்த்தியே— மிக்க
உத்தமத்தமிழ் வித்துவத்தொடு சித்தசுத்தியும் மெத்த
தத்துவம்
உள்ளவர்கள் தோன்றியவை யாறுதான்— அதில்
வள்ளல்செய் திருப்பணி யிவ்வாறுதான்.

தேவிக்கோட்டை மாநகரில் மேஉ ராம மெ சுப ஞ்சேர்

தேறுதற்கொரு வேழுதிக்கிலே யாமினிற்கு மாதினுக்
[கொரு
ஆலயப்புதுக்க மனத் தெண்ணியே— புகழ்
சாலவு மருந்தருணமே நண்ணியே.

5. உத்திரவு பெத்துவேலைக் கொத்தனையா வத்தையுமே
ஓரிரண்டு வாண்டிக்குள்ளே சேர்க்கவே— அந்த
ஊரிரண்டு கட்சிசெய்து பார்க்கவே— முடி
வாகவேபணி யாகலாமென வாகவேயவர் வேகமாகவே
காரிய நடத்தினரும் போதையே— சில
ஒருநுக் கலந்தா ரென்று வோதையே.

6. கந்தைதன்மனத் திலேநினைந்தபடி யேயவர்பின்
வந்தவ ராகிவுகேள்வி கற்றவர்— வேற்
கந்தனரு ளொளியும் பெற்றவர்— நல்
விதைநற்குண சாலியுத்தம ரூநபெத்தின மேகமொத்திடு
மெய்யப்ப னெனவுயர்பேர் கொண்டவர்— பூர்த்தி
செய்யவே தலையிலேற்றுக் கொண்டவர்

7. கொட்டைவேலை தன்னையனைத் திட்டப்படின் மேலதாக
கட்டிமுடித் தாரெவருங் காணவே— அதை
எட்டிசையி லுள்ளவர்கள் பேணவே— செதுக்
கிட்டகல்லி விழைப்பு மாபணிபொட்டி மண்டபமுட்
[பிரகாரங்
கோபுரங்களவு முதலி யாவுமே— உள்
கோவிலெங்கிலு மழகு மேவுமே.

8. சுவாமியின் விமானமொடு ராஜனின் விமானங் களும்
சுத்துப் பிரகாரம்வெள்ளை பூசியே— வர்ணம்
வைத்தழகு செய்தவிதம் பேசியே— துவார
பாலகர்க்கிரு மாதினுக்குயர் வேலவர்க்குவி நாயகர்க்குமே
விம்பங்கள் புதிதாய் செய்து காட்டினர்—கொடித்
தம்பமுங் காந்தவிளக்கும் பூட்டினர்.

9. கும்பாபிஷேகஞ் செய்யவே தம்பாலபிமான மிக்கக்
கொண்டவர்கள் சுற்றத்தாரின் கூட்டமே— எலாங்
கண்டபல வேலைகளி லூட்டமே— கொண்டு

ஐந்துநிலத் தில்விளைவு தந்தபல் திரவியங்கள்
வந்ததுவே நூறுவண்டி யேத்தலாம்— அதற்
கெந்தவிதத் திற்பெருமை சாத்தலாய்— வெண்
காயிலோர்மலை யிலையிலோர்மலை பாயிலோர்மலை [டைக்
[பழமதோர்மலை
கத்திரியொடு முருங்கக் காய்மலை— இளம்
வெத்திலைக் குவியலொடு சிவலை.

முட்டைமுட்டை யாயரிசி போட்டுக்கொண்டு சிட்டு
விட்டார்
கேட்டதுண்டோ யிப்படிச்சாப் பாட்டையே—உண்ண
போட்டிப்போட் டவர்கள் பட்ட பாட்டையே—நகரத்
தார்களுக்கென வோரிடம்மறை யோர்களுக்கிடம்
வேறமைத்தனர்
கந்தமுள சந்தனத்தை யூற்றினர்— அன்னம்
சிந்தின தேனைழகளுண்டு போற்றினர்.

குபேரனக ராவணத்தி லேயொருக்காற்றட்டினாலும்
கோவிலுக்கி ராணத்திற் றட்டில்லையே— இந்த
பூவிலிதைப் போலமைத்த தில்லையே— ஆ
ரஞ்சு மாங்கனி ஆப்பிள் மாதுளை பிஞ்சு வெள்ளரிமா
பிலாக்கனி
சோடாக்கலர் வாட்டர் வண்டி நூறுதான்— மனம்
வாடாமல் சாப்பிட்டாரிந்த வாறுதான்.

யாகசாலை சிங்காரத்துக்காக பல நாட்டிலிருந்தும்
யேகமாக வந்ததுசா மான்களே— தேவ
லோக மிதுவென்றுரே சி மான்களே— குச்சுக்
கட்டுவேலை கமான்வளைவுகள் ஒட்டுகாகித தட்டிவேலையில்
சித்திரமெழுதிவைத்தார் பாருமே—அதைச்
சுத்தியே காந்தவிளக்குச் சேருமே.

கோவிலுக்குள்ளேயே சாமி தேவி பரிவாரங்கட்கும்
கொட்டகையமைத்துவைத்த வாசமே— வழி
பட்டவர்கட்கேயிது கைலாசமே—அதைக்
கூறவென்றொரு நாவினுக்கில்லை பாரோயிரநாபடைத்த

15. இந்தவித வைபவத்தைச் சொந்தமாகத்தன் பெரிய
தந்தையே நடத்திவைத்தார் பாருமே—பெருமை
தந்தவர் மாணிக்கஞ் செட்டி யாருமே— அவர்
தன்மையும்நிறை கல்வியும் பொறை வன்மையும் தரு
[நன்மையுமுயர்
மாநில மெலாமதிக்கலாயின—சில
நாளுமே புகழ்ந்துரைக்கவாயின.

16. வாகனமராவதி வை நாக ரும நல்விலாச
வெங்கடாசலப்பெயர் கொளுத்தமர்— உயர்
தங்கமாகிய மனைசைப் பெத்தவர்— அவர்
ஆகமப்படி யாகமெத்தனை யாரிதைச்செய லாகுமெப்படி
என்று நிதானித்து நிர்வாகித்தனர்—அவரை
அன்று கண்டோ ராருஞ் சிலாகித்தனர்.

17. பேர்பெறுங்கா வேரியிற்றண் ணீர் வரவழைத்து பல
பேர்களுக்கு பகிர்த்த பாங்குமே— வெகு
ஊர்குளங் குட்டை நிரப்பித்தேங்குமே— யாக
சாலை வந்த சனங்குடித்திட நாளுநாழிகையாவதற்குளே
பைட்பிறக்கி தண்ணீர்மொண்டு உத்தினர்—அ
தைப் பலஜனங் குடித்து வாழ்த்தினர்.

18. நந்திகேசன் வந்துதித்த விந்தை பெரு மாலயத்தி
ருந்துநிரு வாகஞ் செயுஞ் சாமியே— அரு
ணந்தித்த ம்பிரானை யிந்தப் பூமியே— புகழ்ந்
தாதரிக்குது நாதசற்குரு பாதநற்றுணை யாயவற்கு மிக்
காயிசுங்கிருபைதர வேணுமே—தமிழ்த்
தேயமெங்குஞ் சீர்பெருகக்காணுமே.

## கும்பாபிஷேகம் தெரிசித்தது.

### வேறுசந்தம்.

"வெள்ளிமலையொத்த பல மேடை" என்ற வர்ணமெட்டு.

1. சன்னிதானம் முன்னும் செட்டியாரும்— தமை
சார்ந்துவந்தவர்கள் சில பேரும்— ஒளி
சாலுமம்மன் கோவிற்றளம் மேலிருக்க லாமெனமே
சென்றார்—பார்த்து—நின்றார்.

கொட்டகைப் பந்தலுந் தென்னை மட்டையைப்
பிடித்துக்கொண்டு
மிருந்தார்—மெய்யும்—வருந்தார்.

கோபுரத்துத் தூவிவரை ஜனமே— நின்று
கொண்டிருந்தவருக்கென்ன பணமே— அந்தக்
கும்பலொரு மாகடலே கம்பலையுடனே எல்லாத்
தலையும்—சேர்ந்து அலையும்.

மாடிகளில் நின்ற ஜனங் குப்பல்— கடல்
மார்க்கத்திலே போன சண்டைக்கப்பல்— அந்த
மாதிரியிருந்த திதுவே பெரிய ஜனத்திரள்
தானே—சொல்லு—வேனே

சாமிதள மேலிருந்த பேர்கள்— வெகு
சந்தோஷத்துடனே யிருந்தார்கள்— விச
வாசத்துறு முகக்களி ராசனுக்குந் தேவக்கோட்டை
யூரும்—கமிஷன்—துரும்.

வைத்த லக்கினத்தில பிடேகம்— செய்ய
வணங்கித் தரிசித்தா ரனேகம்—பேர்கள்
வானவர் புகழ்ச் சன்னிதானமு மகிழவுன்னி
கோயில்—உள்—வாயில்.

வந்தறம் வளர்த்தவளைப் போற்றி— மலர்
வாசமலியர்ச்சனையு மாற்றி— மா
மண்டபத்திலேயிருந்து கொண்டு பணித்தொண்டு செய்த
அப்பன்—மெய்—யப்பன்.

தம்பிகளுடனிவர்க்குப் பட்டு—கட்டிப்பி
தாம்பரத்தையும் போர்த்து விட்டு— உயர்
சன்னிதானங் கூடவழைத்தின்னிசை மேளத்தினுட
னேரே—வந்—தாரே.

கோபுர வாசல் படியில் வந்து— நின்ற
கூட்டந் தெரிசிக்க வருள் தந்து—வெள்ளிப்
பல்லக்கினிலே மெதுவாய்ச் செல்லச் செட்டியாரிரண்டு
பறமே—வந்த—கிறமே.

கோலமுடன் வாரணத்தின் மேலவரை யேயிருத்தி
குடையே—பிடிக்க—விடையே.

10. தந்து மேள வாத்தியங்க ளொலிக்க— இந்த
தாரணியோர்களுங்கண்டு களிக்க— மகுட
தோரணங் குடை சுருட்டி வாரணஞ்சனம்மிரட்டிச்
செல்ல—வாழ்த்து—சொல்ல.

11. இந்திரன் பட்டத்தை பெற்றுக் கொண்டு— போன
தென்னவே செட்டியாரேகக் கண்டு—செய்த
திப்படி யிது வரையில் செப்பினதும் கேட்டதில்லை
என்றார்—வழியிற்—சென்றார்.

12. செட்டியார் தமை யனுப்பி வைக்க— அங்கு
சூழ்ந்திருந் தவர்கள் பிரமிக்க— சன்னி
தானம் மேள வாத்தியமோ டானபலர் போத்தி செய்ய
வந்தார்—மட—மிருந்தார்.

13. எத்தனையோ கோவிலெல்லாங் கட்டி— பணத்தை
இலக்ஷக்கணக்கில் வாரிக் கொட்டி— னூர்கள்
இத்தனையழகாகச் செய் வித்து புகழ் பெற்றவர்க
ளுண்டோ—கேட்ட—துண்டோ.

14. கன்னியா குமரி முதல் சென்னை— வரையில்
சன்னிதானத்தின் பெருமை தன்னை— போற்று
தாரிலையிப் பாரிலே யொப் பாருமுயர்ந் தாருமிலை
யாமே—சொல்லு—வோமே.

15. மன்னு ரெங்கசாமி முதலியாரும்—கோவிலில்
மற்றும் நடேசப் பிள்ளை யென்பாரும்—செட்டி
மார்களுக்கூரார்களுக்கு மோர் குறை யிலா திருக்கப்
பார்த்தார்—கட்டிக்—கார்த்தார்.

16. காலையில் மகாபிஷேகம் செய்தார்—அதைக்
கண்டு தெரிசித்தவர் களுய்தார்—இரவு
காலத்திலே செய்திட்டவி மானத்திலே தெரிசனம்
தந்தார்—வீதி—வந்தார்.

17. தஞ்சையிற் கோதண்டபாணி பியாண்டும்— பின்னும்

# பட்டணப்பிரவேசம் செய்தமை.

## விருத்தம்.

திக்கும் புகழ்கும்பா வபிடேக மானபின்பு அடுத்த நாளே
லிங்கம் பூசைமேகச் சுரப்பூசை எல்லா மங் கினிதாச் செய்து
ணத்தைக் குருநாதன் பவனிவர வேண்டுமெனப் பணிந்து கேட்கச்
டிமக்கள் மனம்போலச் சிவிகையிலாரோகணிக்கத்
தெரிசித்தோமே.

பட்டணப்பிர வேசப் பவனியாய் வந்தார்—வந்து
பார்த்தவர்க் கெல்லாந் தரிசனமேமிகத் தந்தார்.

எட்டிசையும்புக ழெய்துந்தருமைக்குரு
எங்கள் சண்முகநாதன் மங்களமாகவே (பட்ட)

வெள்ளித் தடிகள் குடைகள் சுருட்டிகள் பிடிக்க
லையிட்டு
வெளிச்சமுந் தீவட்டிவெளிச்சமு மொன்றோ
டொன் றிடிக்க
தெள்ளிய வோதுவார் திவ்யதேவாரங்கள் படிக்க—இந்த
தேசத்து வாணமா காசத்திலே சென்று வெடிக்க
மெள்ளப்பதினெட்டு வாத்திய முழங்க
தள்ளித்தள்ளி வந்த கூட்டமுந் தயங்க— (பட்ட)

கருமபுரத்துக் குருவிவ ரென்றுரை சாற்ற—உயர்
தம்பிரான் மார்களிரண்டு புறம் புக ழாற்ற
வருபவர்மார்பிற்பூ மாலையளித் தெகிர் தோற்ற—நல்ல
வாழ்த்துச் சொலிப்பல நாவலர் பாவலர் போற்ற
பொன்மயமாகிய பல்லக்கினின் மீது
சின்மயமாகிய சுவாமி யிப்போது (பட்ட)

கஞ்சை ராஜாக்களால் தந்த விருதுகள் கொடியும்
டில்லி
தன்னையாண்ட பாஷா தாங்கள் தருமெடு பிடியும்
அஞ்சிப் பிடித்து வருபவர் தப்புக்கு அடியும்
தருமை

4. ஆரூர் குவளை வேளூ ரய்யாறு புவனமீ தென்றார்—அந்த
ஆலயக்கட்டளைச் சாமிகளுங் கூடச் சென்றார்
காரூர் கடலூர் சராப்பைகைகட்டியே யெதிர் நின்றார்— அழ
காகவாச்சாள்புரம் கணக்கப்பிள்ளை யென்னவென்றார்
முத்துக்குமரசாமி முதலியார் முதலாக
பத்தியாய் சுந்தரேசய்யருமேபோக (பட்ட)

5. உத்தியோகஸ்தர் பிரபுக்களுமுன்னே போக— அந்த
ஊரிலுள்ளார்க ளெல்லாருமே வந்துடனாக
சுத்தியே கும்பல் நெருக்கத்திலுடல் வேக—மிழலைச்
சுப்பிரமணிய நாதசுர மொது வாக
வாசித்தது பிரமானந்த மாகவே
பேசிக்கொண்டே ஜனமே நடந்தேகவே (பட்ட)

6. வீதியிலே பலர் பூரண கும்பங்கள் வரித்து—காலில்
வீழ்ந்து யெழுந்து வீபூதியை வாங்கியே தரித்து
சோதியேயிந்த வுருவத்துடனவ தரித்து—வந்த
தோற்ற மீதென்னவே நாற்றிசையோருமதித்து
போற்றிக் கொண்டாடிப் புகழ்ந்திடவே கொலு
வீற்றிருந்தாரெமையாளுமுயர் குரு (பட்ட)

## ஸ்ரீ-ல-ஸ்ரீ சன்னிதானத்தின் கூடவந்திருந்த கட்டளை சுவாமிகளையும் காரியதஸ்தர்களைக்கூறியது

### கும்மி.

1. சீர்வளர் பஞ்சன நீச்சுரங் கும்பாபி
ஷேகந் தெரிசித்துப்போக வெணி
தார்வள ருந்தரு மாபுரத்துச் சன்னி
தானம் பரிவார மும் வரவே.

2. புவனம் கட்டளை ராமலிங்கச் சாமி
போற்றறிய திரு வாரூரின்
தவனேர் சோமசுந் தரச்சிவாமியுடன்
தக்கவர் சூழ்திரு நள்ளாற்று.

3. சுந்தர லிங்கப்பேர் சுவாமியும் வேளூரின்

குட்டிச்சிவகுரு நாதச்சாமி யெதைக்
கூறி னுமந்த வாறு செய்யும்
எட்டிப்பாரத் துத்தர வேற்படு தாவென
எதிரில் நிற்பதைப் பாருங்கடி.

நானே சொல் வேண்டமடம் மானேஜரின் பெயர்
நரசிம்மய்யங்கா ரென் பவராம்
தானே யவர் முனந் தாசிலவர் நல்ல
தன்மையைப் பாடி யடியுங்கடி.

பேப்பர்கள் வந்ததைப் பார்ப்பதும் மற்றதைப்
பேசிஉத்தர வானதற்கு
காப்பென வின்ஷியல் கையெழுத்து மிட்டுச்
கணக்கும் பார்க்குறார் பாருங்கடி.

மெத்த வும்நல்லவ ருத்தம சற்குண
மேன்மைக் கல்வித்திறமுடையார்
சித்தமதில் ஒரு தீங்கினை யாருக்கும்
செய்த தில்லை யெனச்சொ லுவாம்.

அன்னவ ரெத்தினம் பிள்ளையடி யவர்
அருகிருப்பவ ராரெனக் கேள்
தன்னலமேகரு தாதவ ருத்தமத்
தாசனடி பிர காசனடி

பேசையி லெழுதும் பேப்பரிலே தலை
பேர்ந்து போனது போலிருக்கும்
மேசம்வ ராதவ ராலே முதலியார்
முத்துக் குமர சுவாமியடி.

நாட்டி லுயர்புகழ் கேட்டு மகிழ்ந்துவைக்
கோர்ட்டுவ ரையிநி லைநாட்டும்
தாட்டிகப் பேச்சினைக் கேட்டவர் மெச்சிடத்
தக்க வர் சுந்தரே சய்யரடி.

எந்த வித வேலை தந்தாலும் பாரப்பதற்
கேற்ற நடேச முதலியாரும்
முந்து முகப்பிலே வந்தவர்க்குப் படி
தந்த புகழினைப் பாருங்கடி.

ஆதீனத் துச் சராப் பாற்றில்மி கவுள

13. வெங்கட்டராமய்ய ரெங்கள் சம்பிரதி
வேலையைப் பார்க்கிறார் பாருங்கடி
தங்க நிகர்த் துரை சாமிப் பிள்ளையும்
தகுந்த பாலுவும் ராய சமாம்.

14. சங்கரய்யர் வெகு சமர்த்தர் காரியம்
சாதிக்கும் வல்ல மைக் காரரடி
அங்கவர் கூட யிருந்தவரைச் சொல்லி
ஆடிப் பாடி அடியுங்கடி

15. சுப்பிர மணிய முதலியா ரவர்
சூச்சுமப் புத்தியாய்ப் பேச்சுரைப்பார்
எப்போதுங் கூட யிருப்பவர் யாருக்கும்
இனியவ ரெனப் பாடுங்கடி.

16 சுப்பிரண் டய்யங்கார் சொன்ன வேலை வெகு
சுருக்கிற் பார்க்கிறார் பாருங்கடி
கூப்பிடும் வேலைமெய்க் காட்டைக் கவனிக்கும்
குஞ்சிதபாதத்தை பாருங்கடி.

17. அட்டவனைக் கிர்ஷ்ண அய்யரவ ரொரு
ஆதிகாலத்து மனுஷியரடி
கிட்டவந் தேதேனும் கூறி விட்டுப் பாடு
பட்டு வருவதைப் பாருங்கடி

18. சுப்பையா தேசிகர் சுப்பிரமணி யய்யர்
செப்புவேன் சீனிவாச ராயர்
ஒப்பியே ஞானசம் பந்தம் பிள்ளையும்
உடனிருக் கிறார் பாருங்கடி.

19. சேந்தங்குடி சொக்க லிங்கம் பிள்ளையும்
செல்வந்த ரானபி ரபுக்களும்
மாந்தை முத் தையாவு டையாரு டனங்கே
மகிழ்ந் திருந்தவர் பாருங்கடி.

20. சுந்தர ராஜப் பிள்ளையும் பக்கிரி
சாமிப் பிள்ளையுமே தருமை
வந்தவர் தங்களை பாடிவாரேன் னுடல்
வளைந்து கும்மி யடியுங்கடி.

21. இடை மருதூரி லிருப்பவராந் தமி
ழிலக்கணங்க ளறிந்தவராம்
திடமுளச் சிதம்பர தேசிகரத்
தினமங் கிருந்தர் பாருங்கடி

தான்று கண்டிகை சாலுவையுங் கட்டி
தோது நிற்கிறார் பாருங்கடி.

து) என்பது திருக்கடவூர் சராப் மு. சண்முகசுந்தரன்.

சொக்கலிங்கந் துணை யாயிருக்கக் கூடச்
சொல்ந மசிவயந் தானிருக்கப்
ரக்கமதில் கவி சண்முகசுந்தரன்
பாடுங் கவிகளைப் பாடுங்கடி.

அய்யார் முதலியார் ஆட்களை வைத்தங்கே
ஆக்கினை செய்கிறார் பாருங்கடி
மையலே கேளு முத்தையா முதலியார்
பக்க மிருககிறார் பாருங்கடி.

ஆச்சா புரத்து வைத்திலிங் கம்பிள்ளை
ஆரோ பெரிய சுவாமிகள் போல்
முச்சு விடுவதின் முன் னொருகாரியம்
முடித்துவருவார் பாருங்கடி.

ஆறு முகம்பரி கலச்சமையல் செய்
தாறு சுவையோ டமுதளிப்பார்
கூறிடும் பண்டாரக் கட்டிலே சுப்பய்யன்
குணத்தைப் பாடி யடியுங்கடி.

பூசைக் கட்டில் பணி விடையைச் செய்யவே
புண்ணியம் செய்தவராரெனக் கேள்
பேசவே னம்பல வாணனுடன மூன்று
பேர்களெனச் சொல்லிப் பாடுங்கடி.

பல்லக் கெடுபிடி வாகனம் மற்றதும்
பார்வையில் வைத்துக்கா பந்து செய்யும்
வல்ல வைத்திய லிங்கம் பிள்ளையும்
வந்திருந் தாரெனப் பாடுங்கடி

அச்சுத ராய புரந் துரை சாமியும்
ஆட்களு மவ்விடம் தானிருக்கான்
எச்சமய மெது உத்தரவானாலும்
மேற்றுச் செய்கிறான் பாருங்கடி.

கத்தி கட்டி யவுல் தாரிருக்கப் பக்
கத்திலே சிப்பாய்துப் பாக்கியுடன்
[illegible]

உ

சிவமயம்.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

திருவையாறு

தருமசம்வர்த்தனீ அம்பிகை சமேத

ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி

ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

மகா கும்பாபிஷேக மகோற்சவ வெளியீடு.

# திருவையாற்றுத் தலமகிமைச் சுருக்கம்

ஷை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் ஆணைப்படி

உடையார்பாளையம்
போர்டு உயர்தரக் கலாசாலைத் தமிழாசிரியர் திருவையாறு
**பொன். சாமிநாத தேசிகர் அவர்களால்**
எழுதப்பட்டு

ஆதீனத் திருக்கூட்டத் தம்பிரான்களில் ஒருவரும்
திருபுவனம் தேவஸ்தானம் ஸ்தானீகரும் ஆகிய
**ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளால்**
பார்வையிடப்பெற்று

கும்பகோணம்
**யதார்த்தவசனி அச்சுயந்திரசாலையில்**
பதிப்பிக்கப்பெற்றது.

ஈசுவர-௵ ] 1937. [ சித்திரை-௴

உ

சிவமயம்.

# முகவுரை.

## திருவிருத்தம்.

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடு மையாற னடித்தலமே.

அம்மை அப்பனும் ஆண்டவன் ஆன்ம கோடிகளை உய்விக்க அருள் திருக்கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் பல. அவற்றினும், மூர்த்தி, தலம், தீர்த்தமென்ற மூவகைச் சீரும் பெற்றன சில. அவற்றுள்ளும் பதிகம் பெற்றன சிலவே. அவற்றினும் ஒருங்கே சைவசமயாசாரியர் நால்வர் திருப்பாடல்களும் பெற்றுத் திகழ்வது எண்ணக்கூடிய மிகச் சிலவே. அத்தகைய தலங்களுள் தலைமையாம் பெருமையுடையது நம் பூலோக கைலாயமாய்ப் புகழுறும் திருவையாறேயாகும். அது, புராண முறையில் அன்றிப் பிற லௌகிக சௌகரியங்களாலும் குறைவின்றிச் சிறப்புற்று விளங்கும் கீர்த்தியுடையது. ஜீவன் முக்தி க்ஷேத்திரமாகிய இத்திருவையாற்றில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகியார் திருக்கோயில் திருப்பணி சுமார் 20 ஆண்டுகள்முன் தருமை ஆதீன மகா சன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் கால

த்தே தொடங்கியது. தேவகோட்டை மகா-௱-ஸ்ரீ உ. ராம. பெ. அ. சேவுகன்செட்டியார் அவர்களும், அவர்களின்பின் அன்னார் குமாரர்கள் செல்வத் திருவாளர் பெரியப்பசெட்டியார் அவர்களும், அன்னார் சகோதரர்களும் ஊக்கந் தளராது முயன்று பல லட்சக்கணக்கான பொருட் செலவிலும், பல்லாயிர மக்கள் தேக உழைப்பிலும், கைதேர்ந்த பல சிற்பிகள் வேலைத் திறத்திலும், கருங்கல் இழைத்த கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், அபிஷேகமண்டபம், உட்பிரகாரம் முதலியனவும் மிக அழகாக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. அதனுடன், ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர், சமயக்குரவ விநாயகர், துவஜஸ்தம்பம், மற்றும் பரிவாரதெய்வங்களும் பிரதிஷ்டை பெற்றிருக்கின்றன. ஆலய முழுவதும் மின்சார விளக்குகளும் அலங்காரமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. சுக்கில-ஆண்டு சித்திரை-மீ 20உ ஆதிவாரம் காலையில் சகல வைபவங்களுடன் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. நீண்டகால தாமதப்பட்டுவிட்டவையின் தொடங்கியதை விரைவில் முடித்துக் கும்பாபிஷேகம் செய்துவைக்கும் பொருளுதவியால் பழுதடைந்தவையும் முற்றுப்பெறு நிலையில் கும்பாபிஷேகம் நிகழ்கின்றது. ஆகியும், மற்றும் பொருத்தமுள்ள கோபுரம் முதலிய திருப்பணிகள், ஆலயத்தின் சிக்கனமும், அருள்பெருகும் செல்வமும், அறம்பல செய்யும் அடங்காப் பேரன்பும் உடைய மகா-௱-ஸ்ரீ பெரியப்ப செட்டியார் அவர்கள், அவர்களது சகோதரர்கள் தளரா முயற்சியால் செய்வனே விரைவில் செய்து முடிய நடத்திவைக்கப்பெற்ற பரிபூரணம். அவர்களுக்கு ஈசன் களாகிய தருமாளர்கள் நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும், சந்தான சௌபாக்கியங்களும் பெற்று மேன்மேலும் சிறந்த புகழுடன் விளங்குமாறு ஸ்ரீ தருமசம்வர்த்தனி சமேத ஸ்ரீ பஞ்சநதீசப்பெருமான் திருவருள் பாலிக்க அப்பெருமான் திருவடிமலர்களை ஆன்மார்த்தமும் சிந்தித்து வந்திக்கின்றேன். இப்பொழுது ஐயாற்று எம்பெருமான் திருக்கோயிலில் தருமை ஆதீனம் 24-வது மகா சன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முகதேசிக ஞானசம்பந்த பரமா

சாரிய சுவாமிகள் ஆணைப்படி டிரஸ்டி ஸ்தானீகம் வகிப்பவர்கள் வயதில் இளைஞரும் அறிவில் முதியரும் அழுக்கற்ற ஒழுக்கமுடையாரும் அருங்கலைபுணர்ந்த பெருங்குணசீலரும் ஆகிய ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர். இயற்கையில், சிவத் திருத்தொண்டே எந்நாளும் விழைந்தியற்றும் நமது சுவாமிகள்காலத்தே இக் கும்பாபிஷேக மகோற்சவம் நடத்தப்படும்பேறு எதிர்பாராது அமைந்தது இத்தலவாசிகளின் புண்ணியமும், சிவபுண்ணிய சீலர்களாம் திருப்பணிச்செட்டியார் அவர்களின் சிவபக்திப் பெருமையுமேயாகும். சிறியேனை இப்பணியில் கூட்டுவித்த சிவபுண்ணியம் பெரிதும் என் அன்பிற்குரிய ஸ்ரீமத் அருணந்தித்தம்பிரான் சுவாமிகளுக்கே உரியது. சிறியேன் இயன்றவாறு இவ்வரலாற்றுச் சுருக்கத்தைத் தொகுத்து எழுதினேன். குற்றம் களைந்து குணம்பெய்து வாசித்து, ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ பஞ்சநதீசப் பெருமான் திருவருள்பெற்று உய்யுமாறு கற்றோரையும் மற்றோரையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம் தங்கள் அன்புள்ள

திருவையாறு பொன். சாமிநாத தேசிகர்,

தமிழாசிரியர்,

போர்டு உயர்தரக் கலாசாலை, உடையார்பாளையம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

உ

முருகன் துணை.

# 1. திருவையாற்றுச் சிறப்பு.

தென்னாட்டுத் திருத்தலங்கள் பலவற்றுள்ளும் முன்னாட்டும் சிறப்புடையது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றைச் சிறப்பும் வாய்ந்தது. காவிரியின் வடகரையில் கவின்பெற விளங்குவது. சைவசமய குரவர் நால்வராலும் பாடல் பெற்றது. இத்தலத்துக்குப் பதினெண் புராணங்களுள் பிரமகைவர்த்தத்தில் உள்ள பஞ்சநத மான்மியம் என்ற வடமொழிப் புராணம் ஒன்றும், தஞ்சை கரந்தையம்பதி ஸ்ரீ வேங்கடராம சாஸ்திரிகள் அவர்களால் மொழி பெயர்க்கப்பெற்று, அவர் மாணாக்கர் வெ-யூர் சிவ. சோலை முத்துப் பிள்ளை அவர்களால் இனிய நடையில் எழுதி அச்சிட்ட தமிழ் வசன நூல் ஒன்றும் உளது. தவிர, தருமை ஆதீனம் எட்டாவது மகாசன்னிதானம் ஸ்ரீ திருவம்பல தேசிக சுவாமிகள் காலத்தே தஞ்சை அரசாங்க மந்திரியாயிருந்த ஸ்ரீமத் கோவிந்த தீட்சிதர் அவர்கள் விரும்பியவாறு அவர்கள் ஆதரவில் ஓர் *புலவர் பெருமானால் பாடப்பட்டது. தமிழ்ச் செய்யுள் நடையில் 2000-க்கு அதிகமான திருவிருத்தங்கள் அமைந்தது. ஐயாற்றுப் பெருமை அனைத்தும் விளக்குதற்கேற்ற விரிவுடையது ஆகிய புராணம் ஒன்று உளது. இஃது இன்னும் அச்சேறவில்லை. இதன் ஏட்டுப்பிரதி தஞ்சை சரஸ்வதிமகாலில் இருக்கிறது. அன்றி, மதுரை ஸ்ரீ சிவப்ப அழகிய தேசிகர் அவர்கள் மாணாக்கர் ஞானக்கூத்தர் இயற்றிய செப்பேச புராணம் என்பது மற்றொன்று. தமிழ்ச் செய்யுள்களாக 437 திருவிருத்தங்கள் உடையது. இது நம் தருமை ஆதீனம் 23-வது சன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் ஆணைப்படி 1930-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டுள்ளது. மேலும், ஐயாற்றுவாசியாகிய ஸ்ரீ ஆண்டார் சுவாமிகள் என்னும் பெரியாரால் தமிழில் செய்யுள் வடிவத்தில் இயற்

---

*பெயர் விளங்கவில்லை.

றப்பட்ட 1000-க்கு அதிகமான திருவிருத்தங்களுடன் கூடிய ஓர் புராணமும் இருந்ததாய்க் கர்ண பரம்பரைச் செய்தி கேட்கப்படுகின்றது. ஆனால், அதற்கு ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை.

## 2. திருவையாறு (பஞ்சநதம்).

கோரதபசி என்பவர் ஓர் முனிவர். அவரது மறுபெயர் சிலாதர். அவரது திருக்குமாரர் சைலாதி. அவர் சிவபெருமானை வேண்டிக்கொண்டு என்னாளும் தன் சன்னிதானத்தினின்று நீங்காது பூதகணத்தலைமை, தன் வடிவம் (சாரூபம்), தன்னின் வேறுபாடு தோன்றாரிஷபமுகம், நந்திகேசுவரர் என்னும் திருநாமம், இரத்தினமயமான பிரம்பு முதலியன அளித்து உடன் கொண்டனர். அப்போது கங்கைநீர், பிரமனது கமண்டலநீர், அம்மையாரது திருமுலைப்பால், மேகஜலம், நந்தி வாய்நுரைநீர் என்ற ஐவகைத் தீர்த்தங்களால் ஆசாரியமகுடாபிஷேகம் செய்தருளிய காரணத்தால் ஐயாறு எனப்பட்டது. வடமொழியில் பஞ்சநதம் என்பர். இத்தீர்த்தங்கள் பின் காவேரியில் கலந்தன என்பது புராணம்.

## 3. ஜப்பேசுவரம்.

கோரதபசி என்னும் முனிவர், பல மலைச்சாரல்கள் பல சிவக்ஷேத்திரங்கள்சென்று பல நூறாண்டுகள் பஞ்சாக்கர ஜபம்செய்தும், எந்நாளும் சிவதரிசனம்செய்தும் ஜபம் சித்தியாகாது வருந்தினார். அப்போது எழுந்த அசரீரி வாக்கின்படி மூலஸ்தானத்தின் மேல்பாகத்தே ஆதி விநாயகர், சப்தமாதர்கள் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் இடையிலிருந்து ஜபம் செய்து ஜபசித்தி அடைந்தமையின் ஜப்பேசுவரம் எனப்படும்.

# 4. பூலோக கைலாயம்.

உடல் எல்லாம் தேய்ந்தும் உள்ளம் தேயாதவர், "கயிலை கண்டன்றி இவ்வுடல்கொண்டு மீளேன்" என்று உறுதி பூண்டவர், உயர்ந்த திருத்தொண்டர் ஆகிய திருநாவுக்கரசர்க்குக் கைலை எம்பெருமான் ஐயாற்றில் கைலாயதரிசனம் தந்தமையின் இப்பெயர்பெற்றது. தெற்குப் பிராகாரத்தில் அப்பருக்குத் தனியே ஓர் ஆலயம் உளது. இன்றும், ஆடி அமாவாசையன்று, ஐயாற்று எம்பெருமான் பகலில் திருவிதிக்கு எழுந்தருளி வாயுமூலையிலிருக்கும் சமுத்திர தீர்த்தத்தில் திருநாவுக்கரசுசுவாமிகள் குளத்தில் எழுந்த கோலத்தைத் தெரிசிக்கச்செய்கின்றனர். இத்தீர்த்தம் இப்போது உப்பங்குட்டை என வழங்கப்படுகிறது. "மாதொரு பாகனார் மகிழும் ஐயாற்றில் ஓர் வாவி, மீது தோன்றி வந்து எழுந்தனர் உலகெலாம் வியப்ப" என்ற திருத்தொண்டர் புராணத் திருப்பாடல் முதலியவற்றால் விரிவு விளங்கும். இரவு, தெற்குப் பிராகாரத்தில் அப்பர் ஆலயத்தருகே ஐயாறர் எழுந்தருளிக் கைலாய தரிசனம் தந்தருளுகின்றனர். அப்பர்சுவாமிகள் கண்ட கைலாயக் காட்சியின் மாட்சி அமைந்த சித்திரமே "மாதர்பிறைக்கண்ணியானை" என்ற திருப்பதிகமாவது.

# 5. உலோகமாதேவீச்சுரம்.

வடக்குப்பிராகாரத்தே இருக்கும் ஆலயம், தஞ்சை இராசராச சோழ அரசன் மனைவி உலோகமாதேவியாரால் அமைக்கப்பட்டமையின் இப்பெயர் பெற்றது. இதுவும், ஐயாறு உடையார் ஆலயமே எனற்குரிய குறிப்பும், அதற்கானதான சாசனங்களும் அக்காலத்தமைக்கப்பெற்ற கல்வெட்டில் காணப்படுகின்றது.

# 6. அம்மையார் திருக்கோயில்.

ஐயாறர் திருக்கோயிலின் வடபால் தனித்தே உள்ள ஆலயம். இதுவே இப்பொழுது சிறந்த சிற்பத் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது. அறப்பெரும் கருணையினால் அகிலாண்டகோடி அனந்த ஜீவராசிகளையும் படைத்துக் காத்தருளும் அகில நாயகனும் எம்பெருமான் பஞ்சநதீசன், தனது ஆன்மநாயகியாம் அறம்வளர்த்த நாயகியாரின் அரும்பெரும் திருவிளையாட்டை அவனியோர் கண்டு மகிழுமாறு அறங்கள் செய்ய இருநாழி நெல்லை அளந்தளித்தனன். அன்னையார் அதனைப் பெற்றுத் தன் அற்புத சக்தியால் அறங்கள் முப்பத்திரண்டினையும் ஆற்றினள். அனு உயிர்களும் உணவின்றி வருந்தாது அறம் வளர்த்தனள். ஆதலின் ஸ்ரீ அறம்வளர்த்த நாயகியார் என்பது திருப்பெயர். ஸ்ரீ தர்மசம்வர்த்தனி என்பது வடமொழிப்பெயர். இத்தலத்தே பல சந்நிதானங்களும் பல சிறப்புடையனவே. ஆயினும், அருள் அழகு நாட்டும் அன்னையாரின் அழகு ஒழுகு முகமும், அருள் ஒழுகு விழிகளும், ஆனந்தமூட்டும் திருவடிகளும் அடியவர் உள்ளங்குளிர்விக்கும் அருமையை அன்னையாரைத் தரிசிப்பவர் நேரில் அனுபவித்து மகிழ்வர். இத்தலத்தே அழகிய மங்களாகார வரதமூர்த்தமாய் விளங்குபவர் நமது அம்மையார்.

# 7. தண்டபாணி திருக்கோயில்.

ஐயாறர் திருக்கோயிலின் கீழ்பால் தனித்தே தெற்கு நோக்கிய சந்நிதானம். அது, நூற்றுக்கால் மண்டப மேலைப்புறம்.

# 8. பிரணதார்த்திஹரர்.

சிவசன்மன் என்பான் ஓர் அந்தணன். க்ஷயரோகி. அவன் கௌதமரது திருக்குமாரர் சதாநந்தர் அருளியபடி, தன் நோய் தீருமாறு இத்தலத்தே சிவதரிசனம், பிரதட்சிணம், நமஸ்காரம், பஞ்சாக்கர ஜபம் முதலிய செய்துவந்தனன். கடைசிநாள் ஓர் இரவு உறங்குகையில் சிவபெருமான் துறவியாய் எழுந்தருளினர். சிவசன்மரது தேகமுழுதும் திருநீறு தடவித் திருவடிதீட்சை செய்தனர். நோய் நீங்கி உடல் தூய்மையுற்று உள்ளம் பூரித்தது. அப்போது சிவசன்மர், *"பிரணதார்த்திஹரா" என்று அழைத்தமையின் இத் திருப்பெயர் உண்டாயது. 'இத்திருநாமத்தால் என்னை அழைப்பவரது பாவத்தைப் போக்குவோம்' என ஐயாறர் திருவாய்மலர்ந்தருளினர் என்பது புராணம்.

# 9. ஆட்கொண்டார்.

கௌதமீதீர தேசவாசி சுசரிதன் என்பான் ஓர் அந்தணச் சிறுவன். தந்தை சுதவசியும், தாய் சுசீலையும் இறந்தபின் வருத்தமேலிட்டால் தன் ஊர்விட்டுத் தலயாத்திரை செய்தனன். திருப்பழனம் வந்து தங்கிய ஓர் இரவு கனவில் யமன் தோன்றி "இன்று ஐந்தாநாள் மரணம் அடைவாய்" என்றனன். அதுகேட்டு அஞ்சித் திருவையாறு சென்று சிவதரிசனம் செய்வதே இதற்குத் தகுந்த பரிகாரம் என்று தேறித் திருவையாறடைந்தனன். அங்கு, வசிட்டர் அருளியபடி, சிவதரிசனம், பஞ்சாக்கர ஜபம் முதலிய செய்து வருகையில், யமன் சொல்லியபடி ஐந்தாநாள் சிறுவன் எதிரே தோன்றினன். வசிட்டர், யமபயத்தை நீக்கும்வகையில், தெற்குக் கோபுர வாயிலில் சுசரிதனை இருந்து

*பிரணதார்த்திஹரர் — வணங்குவோரது பாவத்தைப்போக்குபவர்.

ஜபிக்கும்படி பணித்துத் தாமும் ஜபித்தனர். ஐயாற்று எம்பெருமானை அழைத்தனர். சிவபெருமான் நந்தி எம்பெருமானை ஏவி அந்தணச் சிறுவனைக் காக்குமாறு பணித்தனர். அஞ்சாது எதிர்த்த யமனை நந்தி எம்பெருமான் சங்கரித்து ஒழித்தனர். பின், சிவபெருமான் தெற்குவாயிலின் மேற்புறத்தே தோன்றிச் சுசரிதனுக்கு ஆசி கூறி ஆயுளருளி இல்லறத்திருந்து மகப்பேறடைந்து முத்தியும் அடைக எனக் கூறி, யமனுக்கும் உயிர்கொடுத்து, இத்தலத்திலிருக்கும் தன்னடியாரையும், தரிசிப்போரையும் நெருங்காதிருக்குமாறு பணித்து மறைந்தனர். சுசரிதனும் அவ்வாறே முத்தியுற்றனன். யமபயந்தீர்த்த அந்த மூர்த்தியே ஆட்கொண்டேசப் பெருமான் ஆவர். அவர் சன்னிதானத்தே எந்நாளும் ஒளிவீசிப் புகைவது குங்குலியம். அது சிவபெருமானுக்கிடும் நறுமணந் தரும் பொருள்களில் ஒன்றே என்பதற்குக் குங்குலியக்கலய நாயனார் திருத்தொண்டே சிறந்த சான்றாகும். இத்தலத்தே மிகச் சிறந்த வரமூர்த்தியாய் விளங்குபவர். சீவர்களின் மரணந்த காலத்தே வலச்செவியில் பஞ்சாக்கர உபதேசம் செய்து, யமவாதனையை நீக்கும் கருணையில் பெருமை உற்றவர்.

# 10. ஓலமிட்ட விநாயகர்.

தெற்கு வாயிலின் மேற்பால் தென்திசைநோக்கி எழுந்தருளியிருப்பவர் ஆட்கொண்டார். அவருக்கு மேற்புறம் கிழக்கு நோக்கி அமர்ந்திருப்பவரே இவ்விநாயகர். இவரே சுந்தரமூர்த்திசுவாமிகள் ஐயாறு அடையத் தென்கரையிலிருந்தபடி காவிரி வெள்ளத்தால் ஆற்றைக் கடக்கமுடியாது வருந்திப் பெருமானைப் பாடித்துதிக்க, அபயம் அருளி அழைத்து வந்தவர் என்று கூறப்படுகின்றது. "பரவும் பரிசு" என்ற திருப்பதிகத்தில் "உம்மைக் காணுதே எதிர்த்து நீந்தமாட்டேன் நான்" என்ற பகுதிகளில் இது விளக்கம்.

# 11. காவேரி முதலிய தீர்த்தங்கள்.

பொதுவாய்ப் பல புண்ணிய நதிகளினும் சிறந்தது காவேரி. அந்நதி சார்ந்த தலங்களே புனித தலங்கள். அதிலும், காவேரி பூரண சக்கரத்துடன் வாழும் பெருமையுடையது திருவையாறு. அகத்தியர் சமுத்திரராசனுக்குக் காவேரியை மணம் செய்விக்கக் கருதிக், காவேரியையும் அவள் தந்தை கவேர முனிவரையும் அழைத்துக்கொண்டு திருவெண்காடு சென்றனர். இடையில் ஐயாற்று எம்பெருமானைத் தரிசித்துக்கொண்டு புறப்படுகையில், காவேரி இத்தலத்தை விட்டுப் பிரிய மனமின்றித் தயங்கி வருந்தினள். அதுகண்ட ஐயாற்று எம்பெருமான், உனது நற்பெருங் கலைகளில் ஒன்றேனும் திருவெண்காடு சென்று மணந்து வருக; மற்றைய ஆறு கலைகளொடும் இத்தலத்தே இருந்து உன்னிடத்து மூழ்குவோர் பாவத்தைப் போக்குக எனப் பணித்தனர். அவ்வாறே சமுத்திரராசனை மணந்தபின் கணவனுடன் ஐயாறடைந்து பூரண சக்கரத்துடன் பொருந்தி வதிந்தனர். ஆலயத்தின் வாயு மூலையிலிருக்கும் தீர்த்தமே சமுத்திரராசன் வடிவமானது. சன்னிதானத்தின் தென்பால் இருப்பது சூரிய புஷ்கரணி. வடபால் பிராகாரத்தே இலக்குமி சன்னிதானத்தில் இருப்பது தேவாபிஷேக தீர்த்தம். இத்தீர்த்தம் கூபவடிவாயிருக்கின்றது. இலக்குமியைப் பூசிக்கத் தேவேந்திரன் விசுவகன்மாவினால் நிருமித்தது.

# 12. நந்தியெம்பெருமான் திருமணம்.

திருவையாற்றைச் சார்ந்து வடபால் அமைந்த அந்தணர்புரத்தே சிலாதமுனிவர் தவப்பேற்றால் அவதரித்தவர் நந்திகேசுவரர். அவரது தவத்திற்கு மகிழ்ந்து ஐயாற்று எம்பெருமான் ஐந்து நதிகளாலும் அபிஷேகம் செய்து பூதகணாதிபதியாம் முடியும் சூட்டினர். பின், ஐயாற்று

எம்பெருமான் அம்மையாருடன் நந்திகேசுவரரையும் உடனழைத்துச் சிவிகையில் திருமழபாடிக்கு எழுந்தருளி, வசிட்டமகரிஷியின் பௌத்திரி சுயசாம்பிகையைப் பங்குனி-மீ சுக்கிலபட்சம் பூசநட்சத்திரங்கூடிய சுபதினத்தில் மணஞ்செய்வித்தனர். திருமழபாடி சென்று திரும்புமுறையில், பஞ்சபூதஸ்தலங்களான திருநெய்த்தானம், கடுவெளி, திருமழபாடி, பெரும்புலியூர், திருவையாறு ஆக அமைந்து, பஞ்சபூதஸ்தல பிரதட்சிணமாய் நடைபெறும் அருமை ஐயாறன் பெருமையே ஆகும். வருடந்தோறும் இம்மணம் உற்சவமாய் நடைபெற்றுவருகிறது.

## 13. சப்தஸ்தானம்.

நந்தி எம்பெருமானுடன் ஐயாற்றிறைவன் அறம்வளர்த்த நாயகி சமேதராய்ச் சிறந்த சிவிகைகளில் எழுந்தருளித் திருத்தலங்கள் வழிநெடும் பவனி வருதல். கௌசிகாச்சிரமமாகிய திருப்பழனம், கௌதமாச்சிரமமாகிய திருச்சோற்றுத்துறை, வியாசாச்சிரமமாகிய திருவேதிகுடி, அட்டவீரட்டங்களுள் ஒன்றாய் மேற்குமுகச் சந்நிதியுடைய திருக்கண்டியூர், தாண்டகவேந்தராம் அப்பரும் காழிவேந்தராம் சம்பந்தரும் அளவளாவிய திருமடம் அமைந்த திருப்பூந்துருத்தி, பஞ்சபூதஸ்தலங்களில் முதலாவதாம் திருநெய்த்தானம் ஆகிய சிறந்த க்ஷேத்திரங்களின் வழியாய் ஆறார் மூர்த்திகளும் எதிர்கொண்டழைத்து இருத்தி உபசரித்துத் தாமும் ஐயாற்றுக்கு உடன்வந்து சந்தனதாம்பூலம்பெற்று, மீளவும் தீவர்த்தி, மத்தாப்பு, வாணவேடிக்கை முதலிய வைபவங்களுடன் பவனியாய் மீண்டு பஞ்சநத க்ஷேத்திரத்திற்கு எழுந்தருளுவர். நந்தி எம்பெருமான் திருமண ஊர்வலமே இச்சப்தஸ்தானமாம். பிற பல ஊர்களிலும் இதனைப்பார்த்துச் சப்தஸ்தானம் செய்துவந்தாலும், இயல்பாய் நால்வரது திருப்பதிகம் அமைந்து, பிரதட்சிணமுறையில் வரிசையாய்ச் சிறந்து விளங்கும் அழகு உடையது ஐயாற்றுச் சப்தஸ்தானமே யாகும்.

## 14. ஐந்தாந்திருவிழா ஆத்மபூசை.

ஐயாற்று எம்பெருமான் தன்னைத்தான் அருச்சித்தது. ஐயாறனை ஆகமவிதிப்படிப் பூசிக்கும் ஆதிசைவர் இருபத்துநால்வர். ஒருவர் கங்கையாடக் காசி சென்ற பொழுது, மற்றையோர் அவரது காணி உரிமை முதலியனவைகளைக் கவர்ந்தனர். அவரது மைந்தருடன் மனைவியும் வருந்தி ஐயாறனை வேண்டினர். ஓர் கிழ வேதியராய்ச் சிவபெருமான் எழுந்தருளி உண்மையுணர்ந்து, கங்கையாடச் சென்றவர்க்குப் பதிலாக ஐயாற்றிறைவனை முறைப்படிப் பூசித்து ஓர் மடத்து இருந்தனர். கங்கையாடித் திரும்பிய உண்மை ஆதிசைவரைக் கண்டதும் யாவரும் ஐயங் கொண்டனர். உண்மையில் பூசிக்கும் உரிமையுடையவன் நான்தான், நான்தான் என்று ஒருவரோடு ஒருவர் வாதிட்டு உரிமைச்சீட்டுக் காட்டினர். அவையோர் உண்மை ஆதிசைவரின் ஓலையே பொய் எனக் கூறியதும், சிவபெருமான் உண்மைத் திருக்கோலத்தோடு ஆகாய வீதியில் காட்சிதந்து அவர்க்குக் காணி உரிமை, செல்வ வள முதலிய இருமடங்கு அளிக்குமாறு திருவருள் செய்து மறைந்தனர்.

## 15. ஐந்தாந்திருவிழா மகேசுவரபூசை.

ஐந்தாம் திருவிழா ஆத்மபூசை நடந்தபின், ஆசாரிய அபிஷேகஸ்தர்கள் முதலான சிவதீட்சை பெற்றோர்களை முறைப்படி மகேசுவரர்களாய் நிறைபந்திவைத்துத் தாமும் ஓர் சைவனாய் மகேசுவரராய்ப் பந்தியில் இருந்து திருஅமுது செய்யும் காட்சியே 'ஐயாறு அதனில் சைவனாகியும்' என்ற மணிவாசகரின் அணி வாக்கினுக்கு அமைந்த சாட்சியாம். அந்நாள்முதல் இம் மகேசுவரபூசை நடைபெறுகிறது. ஆதி

முதல் இது, பாலாயி அம்மாள் தருமத்தில் நடைபெற்றது. சில ஆண்டுகளாய் ஆதீனத்தவர்களாலேயே அறம் வழுவாது முறை தவறாது நடத்தப்படுகிறது.

## 16. பலநலம் தருவான் பஞ்சநதீசன்.

ததீசி, விரசன், சிவதாசன், துஷ்பிரவர்த்தி, துஷ்பிரக்ஞன், தார்த்தமன் முதலியோர்க்கு முக்தி கொடுத்தல், சிவப்பிரியன், தருமநாசன் முதலியோர்க்குச் சாரூபம் அருளுதல், கௌதமர்க்கு வரம், சதானந்தருக்குத் தபசித்தி, சுரத மகாராசர்க்கு மகப்பேறு, நாதசன்மாவுக்குக் காட்சி, சுசிகரன் கலி நீக்கம், மிருகங்களுக்கு உயர் பிறவி முதலிய அருளுதல், தலத்து வசித்தவர்க்கும் தரிசித்தவர்க்கும் மரண பயநீக்கம், பல பாவ விமோசனம் முதலிய பல பயன்களையும் அடியவர்க்கு அளித்துத் திருவருள் செய்தனர் என்பது புராண வரலாறு.

## 17. ஆலயத் திருப்பணி.

அயோத்தியின் அரசன் மனுச்சக்கரவர்த்தி குமாரன் பிரியவிரதன். அவன், மக்களுக்கு மகுடாபிஷேகஞ் செய்து வைத்துப் பின் தலயாத்திரை செய்தனன். இடையே அசரீரி கூறியவாறு ஐயாறனைக் கண்டு வணங்கினன். பெருமான் அருளியபடி ஆலய ஜீர்ணோத்தாரணம் செய்து, அணிகலன்கள், அளவற்ற செல்வங்கள், பல கிராமங்கள் முதலிய அளித்து உற்சவ முதலிய செய்து சிறப்பித்தனன். நியமேசர் என்ற முனிவரும் ஓர் முறை திருப்பணி செய்தனர் என்பவை வடமொழி நூலின்படி அறிவது. நியமேசர் அருளியபடி சோழன் கரிகால் பெருவளத்தான் திருப்பணி செய்தனன் என்பது ஞானக்கூத்தரியற்றிய புராண வரலாறு. பின் திரு. கோவிந்ததீட்சிதரால் முன்மண்டப முத

லிய ஆலயப் பணிகள் விரிவாகச் செய்திருப்பதாகவும் தெரிகிறது. இப்பொழுது தேவிகோட்டை சிவபுண்ணிய சீலர் மகா-ள-ள-ஸ்ரீ உ. ராம. மெ. சுப. சேவுகன்செட்டியார் அவர்களால் தொடங்கப்பெற்று அன்னவர் குமாரர்களான சிவபக்த சீலர்களால் நிறைவுபெறுகின்றது.

# 18. பெரியோர்கள் பலர் தோன்றிய பெருமைத்தலம்.

ஆட்கொண்டார் பரதேசி என்னும் ஓர் நிர்வாணமூர்த்தி பல வியக்கத்தக்க சித்திகள் உடையவராய் வசித்துச் சமாதியுற்றனர். இச்சமாதி மேலவீதியிலிருந்து திருநெய்த்தானம் போகும் சாலையில் உளது. கீர்த்தனாசாரியரான ஸ்ரீதியாகப்பிரமம் அவதரித்துப் புகழ் பரப்பிச் சமாதியுற்றனர். இது சாமியார் படித்துறை என வழங்கும் காவிரிக் கரையில் இருக்கிறது. ஆண்டார் சுவாமிகள் என்னும் பெரியார் மேலைமடவிளாகத்தே சமாதியுற்றிருக்கின்றனர். நான்கு வேதங்களும் முற்றும் உணர்ந்த வேதமூர்த்தி ஸ்ரீமுத்துசனபாடிகள், வேதாசாரிய பண்டித ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள், சங்கீத மூர்த்திகளான ஸ்ரீமஹா வைத்தியநாத சிவன் அவர்கள், பட்டணம் சுப்பிரமணியஅய்யர் அவர்கள் முதலியோர் அவதரித்த பெருமை உடையது. சுதேசமித்திரன், இந்து என்ற தமிழ், ஆங்கிலப் பிரபல தினசரிப் பத்திரிகைகளை ஆதியில் தோற்றுவித்த அரிய மேதாவி ஸ்ரீயுத G. சுப்பிரமணியஅய்யர் அவர்களும் தோன்றிய அரும்புகழ் வாய்ந்தது. தஞ்சைச் சிவாஜி அரசரின் தயைக்குப் பெருவிளக்கமாக ஒளிரும் கலியாணமகால் என்னும் அரசர் கல்லூரி இங்கு, வடமொழி, தென்மொழிகளில் பெரும் புலமைதரும் கல்வி, இலவச உணவு முதலிய சௌகரியங்களுடன் அளிக்கப்படுகின்றது. தென்னிந்தியாவிலேயே இதுபோன்ற சிறப்புடையது வேறில்லை.

சைவசித்தாந்த ஞானபானு ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிகர் என்னும் பெரியார் சிவஞானமுதிர்ந்தவர்; சிறந்த சிவயோகி. அன்னவரின் உத்தமமாணாக்கர் ஸ்ரீ தருமை குருஞானசம்பந்ததேசிகர் என்னும் பெரியார். அப்பெரியாரே இத்தருமை ஆதினத்து முதற்சன்னிதானமாய் எழுந்தருளியிருந்தவர்கள். 4-வது மகா சன்னிதானம் ஸ்ரீ மாசிலாமணிதேசிகசுவாமிகளைக் குருநாதனாய்க்கொண்டருளியவர்களை நம்செந்தில் முருகன் அந்தமில் அருளை அடைந்து விளங்கிய ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள். அப்பெரியாரை மாணாக்கராய்ப்பெற்ற மாட்சிமைமே ஆதினப்பெருமைக்கு அமைந்தவொரு சாட்சியாம். பின் வழிவழி வருபவர்களான 20-வது சன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் காலத்தே இத்திருப்பணி தொடங்கியது. இன்று 24-வது சன்னிதானமாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்காலத்தே இக்கும்பாபிஷேக மகோற்சவம் நடைபெறுகிறது. ஸ்ரீ-ல-ஸ்ரீ சன்னிதானம் அவர்கள் நேரில் எழுந்தருளிச் சிறப்பித்து இம்மகோற்சவத்தைக் கடாட்சித்து ஆதினத்தின் பெருமையை அணிபெறச் செய்தமைக்கு இத்தலவாசிகள் சார்பாக என்றும் மறவா நன்றியைச் சமர்ப்பித்துக்கொள்ளுகின்றேன்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீய தெலாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

அன்பளிப்பு

# ஸ்ரீ இராமாயணச் சிந்து

## ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி லீலைக் கும்மி

3817.
சி.ர.
VI. சிந்து. 3

இவை

அம்பாசமுத்திரம் முன்சீப் கோர்ட்டு
வக்கீல்
எச். டி. சுப்புசுவாமி ஐயரவர்களால்

இயற்றப்பெற்று,

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
அடையாறு,
சென்னை-20.
MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

எ. கெ. சர்மா அவர்களால்
கார்டியன் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டன.
1912
இதன் விலை அணா 2.

## சமர்ப்பணம்

இசைத் தமிழின் பிரபந்தங்களி லொன்றாக அமைக்கப்பட்டு ஸ்ரீமான் கவி அண்ணாமலை ரெட்டியாரவர்கள் பாடியிருக்கும் காவடிச் சிந்து மெட்டுக்களில் இந்த "ஸ்ரீ இராமாயணச் சிந்து" என்னால் பாடப் பட்டு அதை என்னுடைய நண்பரும் தென்மொழி ஆசிரியருமாகிய அம் பாசமுத்திரம் கஸ்பாவிலிருக்கும் ஊர்க்காடு ஜமீன் எஸ்டேட்டு மானே ஜர் ஸ்ரீமான் வக்கீல் பாலகிருஷ்ணய்யரவர்களுக்கு சமர்ப்பணம் செய் யப்பட்டது.

7-12-1911. H. T. சுப்புசுவாமி ஐயர்,

அம்பா சமுத்திரம்.

அம்பா சமுத்திரம் கஸ்பாவிலிருக்கும் ஸ்ரீமான் வக்கீல்
பாலகிருஷ்ணய்யரவர்கள் இயற்றிய

## சாற்றுக்கவி

ஆலைவாய்க் கரும்பின் றேனு மமுதமு நிகர்க்குஞ் சொல்லாற்
சோலைசூ ழம்பை வாழும் சுப்பிர மணிய னென்போன்
மாலைசேர் மாலைப் பாடி மன்னிய செல்வம் பெற்று
வேலைசூ ழுலக மெங்கும் நாட்டினான் புகழை மேலோன்.

---

அம்பாசமுத்திரம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் ஹரிஹரபாரதியவர்கள் இயற்றிய சாற்றுக்கவி.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

அந்தணர்தங் குலதிலகன் அம்பைதிரு மலைசாமி ஐய னீன்ற
சந்ததியு ளொருவன்சுப்பு சாமியென்பான் ராமகதை தனைக்க டைந்து
வந்தருளுந் தெள்ளமுதிற் சருக்கரையாய்ச் சங்கீதம் மருவத் தெய்வச்
செந்தமிழாற் சிந்தாக்கித் தேசத்தார் செவிதோறுஞ் சிந்தி னானே.

ஓம் கணபதி ஸஹாயம்.

# "ஸ்ரீ இராமாயணச் சிந்து"

3419

8480

ஓம் ஸ்ரீ இராமஜெயம்

## கலைமகளுக்கும் கணபதிக்கும் ஸ்துதி

சீரான சிந்துகளைத் திருமால்மேற் செப்புதற்குக்
காரானை மாமுகனுங் கலைமகளுங் காப்பாமே.

## 1-வது பாடல்

## ஸ்ரீ இராமர் ஜனனமும் விசுவாமித்திர ரிஷி இராமனை அழைத்தலும்.

"வண்ணத் தினைமாவைத் தெள்ளியே" என்ற மெட்டு.

அயோத்தி மாநகர் கோனவன் ஆறு
பத்தாயிரம் வய தானவன் பேரு
தச ரதன் தர்ம மானவன் தன
தருமை கொண்ட கௌசல்லிய கைகேயிசு மித்திராதேவி
பத்தினி மாருடன் கூடியே மிக
புத்திர வாஞ்சையால் வாடியே.

புத்திர காமேஷ்டி யாகஞ்செய் தவன்
நித்திரையை விட்டுத் தவஞ்செய் ததில்
புத்திருக் கநுக் ரகஞ் செய் தருள்
பெறவேதிரு தரணீதரன் அவதாரித்துப் பதி ராமனுய்க்
கௌசல்லிய மாதிடம் பிறந்தான் உடன்
துஷ்ட ஸம்ஹாரத்திற் சிறந்தான்.

3. சுமித்திரை மக்களிருவர் ஜேஷ்டர்
லக்ஷ்மண தாசனென் றொருவர் தம்பி
சத்ருக்னனென் றொருசிறுவர் அன்றி
பதிராஜனுக் கதிமோகமாய் ரதிகேளியிற் சுகமேதரும்
கைகேயி மாதுக்கோர் பாலன் பேரும்
பரதனும் வெகு கோலன்.

4. லக்ஷ்மணன் நற்குண சீலன் அவன்
ராமமூர்த்திக் கனுகூலன் நன்றாய்ப்
போர்புரியும் படி காலன் நாலு
குமரர்களும் அமரர் புகழ் அதிரஞ்சித மிதமிஞ்சிய
செல்வம்பெறும் அஸ்திர மூன்றினர் வேறு
யாரும் நிகரன்றித் தோன்றினர்.

5. ராமன் விளையாடும் பருவம் கண்டு
யாரும் மோகித்திடும் உருவம் அந்தச்
சமயத்தில் வெகு கருவம் கொண்ட
ஒருயாமுனி விரைவாகவே அருகே வந்து முறை சாற்றிடக்
கூற்றுவன் போலொரு சொல்லையே சொல்லக்
கிட்டிவந்தார் பெரும் தொல்லையே.

6. சூரிய குலத்து வீரனை மீறி
யாரு மணுகாத சூரனை வெகு
அந்தம்பொருந்திய மாரனை விசு
வாமித்திர முனிவர் செயும் யாகம் பரிபாலித்திட
யாசித்திடவே தியங்கினன் பதி
பாரில் விழுந்து மயங்கினன்.

7. மாரிஷி முன்வந்து தணிந்தான் மரி
யாதைசெய் தவரைப் பணிந்தான் கேட்ட
தேதுந்தாரே னென்று துணிந்தான் ஆனால்
அருமைகொண்ட அதிபாலனைத் தனியேயிட மனமன்னியில்
வாக்கு மாறாது தளம்பினன் மெத்தப்
பைத்தியங் கொண்டான் போல் விளம்பினன்.

## 2-வது படலம்

### விசுவாமித்திர முனிவரை நோக்கி தசரதன் புலம்பல்.

இராகம் பியாக். தாளம் திரிபுடை.

குருநாதா குலமணி ராமனை
எப்படி நான் 'பிரிந்திருப் பேன்
அறுபதினாயிரம் வயது சென்றதன் மேல்
அன்புடன் பெற்றெடுத்தேன் தேவா
என் ராமா சந்த் ரனை யொரு நிமிஷமும்
விட்டுப்பிரிந் தெப்படி நான் சகித்திருப்பேன்

### அதற்கு முனிவர் தைரியம் கூறல்

பதறாதே பதி தசரத ராஜன்
புதல்வனும் மனிதனல்ல
செந்திருமாலுந்தன் உந்தியில் ஜனித்ததின்
விந்தையை நீ யறியாய் ராஜா
உன் மைந் தன் ஸ்ரீ அதி வீர பால ராம
சந்த் ரனது அருமை நான் அறிவேனடா.

### மறுபடி தசரதர் கூறல்

முனிநாதா உனது மகம் முடிக்க
ரதகஜ துரக மிதோ
தங்கிடுஞ் சேனையோ இங்கிதப் பொருளோ
பாங்காயழித்திடுவேன் நாதா
என் ராம சந்த் ரனை யொரு நிமி ஷமும்
விட்டுப் பிரிந் தெப்படி நான் சகித்திருப்பேன்.

### மறுபடி முனிவருரைத்தல்

பொருள் வேண்டாம் திரள் படை மருள் வேண்டாம்
அருள் தரும் மகன் போதும்
சத்திய ஹரிச்சந்திரன் தத்திய சிவி ராஜன்
உத்தம குலத்தோனே தத்தம் செய் திப்போ
சித் தங்க லங்கி மெத்த நித்திய மாய்ச்
சத்திய குலத்தைக் கெடுத்தாய்.

# 3-வது படலம்

## "ஸ்ரீ இராமர் ரிஷியோடு போய் யாகம் காத்தல்"

### தசரதன் விசுவாமித்திரரை நோக்கிச் சொல்லுதல்.

" பூமி மெச்சிடும் அண்ணுமலைக்கோர் துணையானவன்" என்ற மெட்டு.

1. கால்கைகள் நோகாமல் கண்ணிலிட்டுவளர் கண்ணனே
கதிர் வண்ணனே நீல வண்ணனே கானல்
காடிபுலிதங்கும் காடுமேடுகளில்
போகவோ மைந்தன் நோகவோ.

2. வேனலன்றி வெற்றிவேர்கள்கட்டி சொர்ணத் தொட்டில்மேல்
மேடைக்கட்டில்மேல் மெத்தைப் பட்டின் மேல் வாடித்
தூங்கும் பாலன் காட்டில் ஏங்கிச் சோர்ந்தலையக்
காலமோ என்ன கோலமோ.

### முனிவர் தைரியங்கூறல்

3. துஷ்டரைச் சிக்ஷித்து சிஷ்டரை ரக்ஷிக்க எண்ணிய
உனை நண்ணி யவதாரம் பண்ணிய ரகு
ராம மூர்த்திகொண்ட நேமமென்ன வென்று
நோக்குவேன் துன்பம் போக்குவேன்.

4. ஞானமின்றி யுனக்கேனடா இத்துன்ப மிஞ்சுதே
மனம் அஞ்சுதே உயிர் முஞ்சுதே வீர
தீரனை ராமன் சூரனைத் தன்னைக்
காட்டுவேன் துயர் ஓட்டுவேன்.

5. பக்ஷமான தாஸன் லக்ஷ்மணனைக் கூட்டிப் போனவன்
ராமனானவன் ஒருகானவன் போலப்
பசியைப் பார்த்திடாது ரிஷியைக் காத்து நல்ல
சீடனாய்ப் படு வேடனாய்.

6. காடு சேர்ந்து நடுமையம் நாட ஒரு கூடகி
வனக்கேடகி தடித்தாடகி வந்து
அட்டகாசம் செய்து எட்டியே குதிக்கக்
கொன்றனன் ராமன் வென்றனன்.

7. யாகசாலை சென்று வேகவில்லை யூன்றுந் தீரனாய்ப்
படுவீரனாய்க் கொடுசூரனாய் யாகம்
பூர்த்தி செய்து வைத்தான் போர்புரிந்து ராம
மூர்த்தியே பெற்றான் கீர்த்தியே.

## விசுவாமித்திரர் ஸ்ரீராமனை ஸ்துதித்தல்

8. கண்ணிமை தன்னைப்போல் எண்ணி மகம் காத்த நாயகா
மோக்ஷதாயகா அதிமாயகா உன்னை
அகத்தில் காண்க வொண்ணு மகத்தில் காக்கவைத்த
பாக்கியமே வெகு சிலாக்கியமே.

---

## 4-வது படலம்

### சீதையும் சகிகளும் பந்தாடுவது

"வண்ணத்தினைமாலைத் தெள்ளியே" என்ற மெட்டு

1. மாலை வெய்யில் மிஞ்சி மேவுதே வனச்
சோலைக்குயில் கொஞ்சிக் கூவுதே நகர்
சாலையில் சாரலும் தூவுதே செய்ய
சிறுமாதருக் கரிதாகிய திருநாளிது விளையாடிடப்
பந்தாடப் போவோம்வா பாவையே அந்தி
மந்தாரம் பாரிதோ பூவையே.

2. சிங்காரத் தோப்பை நீ பாரடி அங்க
லங்காரம் எத்தனை சீரடி வெகு
நங்கைமா ரெத்தனை பேரடி கூடிப்
பந்தாடி மகிழ்ந்தோடவே சந்தோஷமாய் வந்தோராங்கு
காத்துக்கொண்டு தங்கி உன்னையே எதிர்
பார்த்து நிற்கின்றாரே முன்னையே.

3. சிவந்தி மல்லிகை சீதளம் முல்லை
பவள மல்லிகை பூதளம் ரோஜா
குவளை மந்தாரை நீர்வளம் பின்னும்
இருவாக்ஷியும் நீலோத் பலம் மருதாமரை மந்தாரையின்

சாகைக்குயில் நாடிப் பாடுதே மயில்
தோகை விரித்துக் கொண்டாடுதே.

4. குயில் கிளி குஞ்சு பொரிக்குதே கான
மயில் மைனாத் தோகை விரிக்குதே சோலை
கயிலைபோல் அயில் தரிக்குதே இன்னும்
நரிநாகமும் திரிசூனமும் கரிகாகமும் வரிசைபட
நேத்திரானந்தம் புகட்டுதே நீரில்
வாத்துகள் கூடிப் பகட்டுதே.

5. தட்டாமாலை சிலர் ஆடவே சிலர்
கட்டுக் கண்ணா மூச்சி ஓடவே சிலர்
தட்டுக்கிளித் தட்டில் கூடவே சிலர்
காண்டு எனும் கல் ஆட்டமும் பாண்டி எனும் துள்ளாட்டமும்
பற்பல இடங்கள் நாடவே சீதை
அற்புதப் பந்தாட்டமாடவே.

6. சோலைக்குள் பந்தெங்கே தேடுவீர் கன்னி
மூலைவில் லண்டையில் கூடுவீர் கண்டு
மாலைக்குள்ளே மாறியாடுவீர் எனக்
காணுதொரு பந்தைமிக வீணாகவே தேடி யங்கு
வில்லைக் கண்டும் பந்தைக் காணாதே மிக
தொல்லைப் பட்டா ரொன்றுந் தோணாதே.

7. பந்தோடி வில்லின் கீழ்ச் செல்லவே கண்டு
அந்தந்தப் பெண்ணும் வாய் மெல்லவே அதைச்
சொந்தமாக்கக் குழி கெல்லவே பந்தும்
மீளாதது கண்டே வுடன் தாளாலதை ஜானகி
தட்டி ஒருதரம் சலித்தாள் உடன்
கிட்டிப் பந்தை மீட்டிக் கெலித்தாள்.

8. பண்டையில் சிவனார் வில்லது யாரும்
அண்டிவளைக்காத கல்லது தொட்டால்
மண்டை பிளந்திடும் வல்லது என்றும்
தகுமானதோர் வலுவோடதை லெகுவாகவே சலித்தாளென்று

கேட்டு ஜனகரும் மகிழ்ந்தார் மற்றும்
நாட்டிலுள்ளோர் கேட்டும் புகழ்ந்தார்.

### ஜனகராஜன் சபதம் கூறல்

9. சுயம் வரக்கொடி நாட்டியே தனு
தொடுக்கும் பணயம் தீட்டியே சீதை
மணக்கொடியையும் சூட்டியே சொன்னான்
ஜெகமெச்சியசிவவில்லையேதொடுப்போருக்குக்கொடுப்பேனென்று
இல்லையே வேறொரு துணைவன் படு
வில்லனே ஜானகிக் கிணைவன்.

### ஜனகராஜன் திருமணப்பத்திரிகை அனுப்புதல்

10. வில்லைத் தொடுத்திடும் வல்லவா சிவ
வில்லை முறித்துமே வெல்லவா சீதை
சில்லைக் கற்கண்டையும் புல்லவா என்று
ஜனகாதிப னதிவேகமாய்த் திருநாளையும் குறிப்பிட்டு
முகூர்த்தப் பட்டோலை ஏவினான் நாட்டில்
சொர்ணத்தால் பூமாரி தூவினான்.

---

## 5-வது படலம்

### மிதுலையில் ஜனகராஜன் ஏற்படுத்திய சுயம்வர மண்டபத்தைச் சீதைக்கு சகி காட்டுதல்

### பாங்கி கூறல்

"சந்தவரை வந்தகுக நாதா" என்ற மெட்டு.

1. சந்திர பிம்பக் கண்மணியே சீதே எந்தன்
சுந்தரி மனோன் மணிய மாதே உந்தன்
பந்தலில் புகுந்து மெள்ள வாராய் இந்த நேராய்
என்ன சீராய் மன்னர் பந்தி வகுத்திருப்பது பாராய்.

### சீதை கேட்டல்

2. சேதியென்ன சொல்லடி விநோதம் இன்று
வீதிதோறும் புகழ் பெறும் கீதம் அதை

மறைத்தாலென் மனமும் நோகாதோ என்னவாதோ
அது சூதோ அதை என்னிடமும் சொல்லிட லாகாதோ

## பாங்கி கூறல்

3. அண்டம் புகழ் மண்ட பத்தை நாட்டி அதில்
மண்டல பதிகள் சபை கூட்டி சிவ
வில்லை யூன்றும் வல்லவனைக் காட்டி உனைக் கூட்டி
மாலை பூட்டி மணம் சூட்டிடவே இந்த மன்னர் பேட்டி.

## சீதை கேட்டல்

4. வாடி எந்தன் சகி சர சாக்ஷி காண்போம்
கூடியதோர் அரசர் கண் காக்ஷி அவர்
எந்தநாட்டு மன்னரவர் யாரு எந்த ஊரு அவர்பேரு
அதைக்குறித்தெனக் கொருமுறை கூறு.

## பாங்கி கூறல்

5. சுயம்வரம் கோரிவந்தோ ரூரும் நன்றாய்
எத்திசை விளங்குமவர் பேரும் நன்று
யெடுத்து நானுரைத்திடுவேனே எந்தன்மானே
அடிதேனே அவர் சிறுமை பெருமை யறிவேனே.

## சீதை மலைந்து கூறல்

6. நல்லோர் பொல்லோர் எல்லோரும் வந்தாரே அதில்
வல்லவரை யாருமறியாரே மனம்
பற்றிடாத யாரோ என்னைக்கூடி மணஞ்சூடி
கூடவாடி யென்றாலென்ன கதியாகுமடி சேடி.

## பாங்கி சீதைக்குத் தேறுதலுரைத்தல்

7. என்னடி மலைவு அரசாணி செல்வத்
திருமாலிருக்க உனைப் பேணி பொல்லா
எவனுக்குக் கிடைக்கு மிக்காணி கலைவாணி
உந்தன்பாணி ரகு ராமசந்திரனுக் குற்ற ராணி.

## 6-வது படலம்

### மிதிலைக்கு ஸ்ரீராமன் போவது

"பூமிமெச்சிடு மண்ணுமலைக்கோர் துணையானவன்" என்ற மெட்டு.

1. வில்லை முறித்திடும் வல்லவருக்கென்று பாக்கிட்டு
நல்லவாக்கிட்டு உனைச் சாக்கிட்டு சீதை
கலியாண மறிவிக்கும் திருமணக் குறிப்பென்று
காட்டினார் மோகம் மூட்டினார்.

2. மாமுனி சொன்னசொல் ராமனும் கேட்டுள்ளம் பெருகவே
மிதிலை அருகவே நடந்து வருகவே அங்கு
கல்லாய்த்தோன்றும் பெண்ணகல்யை சாபம் தீர்த்து
உவர்ந்தனர் மிதிலை சேர்ந்தனர்.

3. வங்க குங்க அங்க மத்விய மாள்வ சிந்து குர்ஜர
சேர சௌராஷ்டிர சோழ மாருஷ்டிர பப்ர
பாண்டிய கோசலவிதர்ப கோங்கண கர்
நாடக மகத விராடக.

4. காஸ்மீர பாஞ்சால குந்தள நேபாள கேகய
சாள்வ மன்னவன் கூடத் தென்னவன் பல
விதவிநோதமான மதகஜங்கள் கூட்டம்
பாரடி என்ன சீரடி.

5. பார்ப்போர் மெச்சிடவும் தர்ப்பார் கூட்டித்தரும் போசனம்
வெகு ஆசனம் மிகு வீசனம் பல
தேச ராசர் வந்து பாசமுடன் மந்த
ஹாசமாய் வெகு நேசமாய்.

6. கூடிவீற்றிருந்த கோடி கொற்றவரும் சுற்றியே
சீதை பற்றியே மோகம் முற்றியே சற்றும்
கண்ணைக்கொட்டிடாமல் பெண்ணை நோக்கி
மனம் குளிர்ந்தார் மிகத் தளர்ந்தார்.

## (அதே மெட்டு) பாங்கியும் தேவியும் அரசர்களை நோக்கித் தனித்துப் பேசுதல்

7. ஜோடி சால்வை போர்த்தி மோடியாக நிற்போன் பாரடி
சரபோஜனே மகாராஜனே அவன்
தாடி நரை கொண்டு வாடி வெளுத்த தோர்
கேசனே கிழ ராசனே.

8. அங்கமாக வொரு ரங்கு சால்வை வீரன் அங்கேபார்
அங்கதேசத்து ரெங்கனுமடி அவன்
அங்கந் தீயில் வெந்த செங்கல் நிறங்கொண்டு
மங்குதே முகம் தொங்குதே.

9. நீட்டச் சாமரைகள் போட்டு வீசும் சவுராஷ்டிரபூ
பதி ஜேஷ்டனும் தர்ம சிரேஷ்டனும் அவன்
துஷ்டபுத்தி யென்னைக் கஷ்டப் படுத்திடு
வானடி சகி யேனடி.

10. தாசி பட்டிடாமல் வீசிக்கொண்டு நிற்கும் காசிபூ
பதிகோசலன் தர்ம வாசவன் பொல்லா
தாசி வீடனவன் வேசியோ டலைவன்
தேசமாய் மாறு வேசமாய்.

11. பாண்டியதேசத்துத் தாண்டவனுமடி கண்டாயோ
அவன் கொண்டையில் மின்னும் கெண்டைபார் அவன்
காடிபோல மிகவிருண்ட தாடி மீசை
பாரடி மெத்தப் போரடி.

12. சோழ நாட்டு மன்னன் தோழராஜனென்ற வேந்தனும்
வெகு சாந்தனும் அதிகாந்தனும் அவன்
மனமும் கோழையடி தனுவும் கூழையடி
ஏழையே ஏண்டி பீழையே.

13. சுற்றிச் சுற்றிநல்ல உற்றுப் பார்க்கும் பாலன் கேத்திரன்
நல்ல காத்திரன் ஹரி தோத்திரன் அவன்
ஒற்றைக் கண்ணும் போக மற்றக்கண் ணிலும்பூ
படருதே கால்கள் இடறுதே.

14. அயோத்தி மாநகர் ஆண்டிடும் கோதண்ட பாணியாம்
தோளில் தூணியாம் வாக்கில் வாணியாம் நல்ல
ராஜ திருஷ்டி கொண்ட தேஜசுள்ள முகம்
பாரடி என்ன சீரடி.

15. வெண்சாமரை வீசும் செந்தாமரைக் கண்ணன் இராமனை
பல வீமனைப் பதிசோமனைக் கண்டு
மங்கை சீதை தன தங்கங் குளிர்ந்திட
நாணினாள் வெட்கிக் கோணினாள்.

---

## 7-வது படலம்

### மிதிலை தர்பாரில் ஜனகராஜன் அரசர்களுக்கு வில்லைக்காட்டி முறிக்கப் பிரார்த்திப்பதும் அவர்கள் புகல் சொல்வதும்.

" சென்னிகுளநகர்வாசன் " என்ற மெட்டு.

1. வையகத் தோன் மன்னன் ஜனகன் தர்பார்
மையம்வந் துரைத்தான் அனகன் இந்த
முடிமீதினிற் பரமேசுரன் கொடிசூடிய கனவில்லையே
விள்வீர் கன்னி கொள்வீர்.

2. இலங்கை மாநகர் வேந்தன் எழுந்
திதோ விண்டே னென்றான் காந்தன் அவன்
வலுவத்தனை முழு பத்தியும் தலைகுப்புற நிலைதப்பியே
வீழ்ந்தான் மன்னன் தாழ்ந்தான்.

3. சோழமா தேசத்து வாழா இந்த
வில்லைத் தொடுப் பாயோ தோழா ஐயா
என்னாலது வாகாதையா கையிற் படுகாயம்பட
மாட்டேன் தண்டம் போட்டேன்.

4. அங்கமா தேசத்தோன் குருங்கி வந்து
எங்கே பார்ப்போ மென்று நெருங்கி இன்று
சகுனம் படு பொல்லாதது தினமும் மிகப் போதாதது
என்றான் உடன் சென்றான்.

5. விதர்ப்ப ராஜனவ் வில்லையே பார்த்து
எதற்கென்று னிந்தத் தொல்லையே ஆனல்
தொடுப்போமென அருகே வந்து நடுவோ மெனத்தடுமாறியே
படுத்தான் வில்லை விடுத்தான்.

6. கலிங்க தேசத்துக் கனகன் கண்டு
குலிங்கினேன் மெத்த அனகன் வெறுங்
கருமீசையும் பிடிதாடியும் சிறுமாதருக் கிசையாதவன்
ஏங்கினேன் பின்னே வாங்கினேன்.

7. விராட தேசத்து மன்னன்றன் இந்தப்
போராட்டம் வேண்டா மென் றகன்றன் தன
திடுப்பில் ஒரு பிடிப்பென்றுரைத்தாரே தனை அழைத்தாற்போல
ஓடினேன் வழி தேடினேன்.

8. கோதண்ட பாணியாம் இராமன் என்றுந்
தீதண்டா புண்ணிய பீமன் தன
தருகே நின்ற முனிமாதவன் விடையோடதி பெரியோர்களைப்
பணிந்தான் உடன் துணிந்தான்.

9. கருணைச் சிவனையே போற்றி வில்லைக்
காவடிபோல் தோளிலேற்றிக் கண்கள்
கூசப்பிர காசத்தொளி வீசப்படு வேகத்துடன்
வில்லையே செய்தான் சில்லையே.

10. ஒய்யார மாயங்கு தேவி சீதை
பையப் பையவந்து மேவி கண்டாள்
ஜெக மெச்சிய தனுசைமிக லெகுவாகவே பகவே செய்த
தோழன் மண வாளன்.

11. மண்டபத்துக் கப்பால் மேவி தேவர்
கந்தர்வர் பூமாரி தூவி வெகு
அமரர்புகழ்ந்திடுவாத்யங்கள் இமையோர் செவியடைக்குந்தொனி
காண்பார் இன்பம் பூண்பார்.

# 8-வது படலம்

## சீதையும் சகிகளும் ஓர் பூங்காவனத்தில் கேலி பரிகாசத்துடன் ஸ்ரீ ராமனை ஸ்துதித்தலும் நீராடலும்

“ தெள்ளுதமி ழுக்குதவு சீலன் ” என்ற மெட்டு

1. பாங்கிமார்களுடனே கூடி சீதை
பூங்காவனத்து நிழல் நாடி அதி
கோலா ஹலத்துடனே பாலன் ராம கீதங்கள்
பாடினார் புகழ்ந் தாடினார்.

2. சீதைக்கிசைந்த மணவாளன் அவள்
ஆசைக்கிணங்கி வந்த தோழன் நல்ல
வாழும் அயோத்தி யெந்தநாளும் செழித்த நகர
ராஜன் மக ராஜன்.

அடையாறு
சென்னை-20.

3. அடிமுடி நடுவற்ற நாதன் அரும்
வேத சாஸ்திர புராண கீதன் சுத்த
நித்த முக்த புத்தரான சத்து சித்தானந்த
ரூபன் தர்ம பூபன்.

4. அழகு பொருந்து மணவாளன் உடன்
இளகு மையலுங் கொண்ட தோழன் நல்ல
சுந்தரிக்குச் சுந்தரனாய் அந்த முடனே பிறந்த
மாரன் அதி வீரன்.

5. ஜானகி நீ மாடிமேலே சென்று அந்த
ஜன்னலண்டை ஒண்டி நிற்கக் கண்டேன் சகி
கண்ணிமைகள் கொட்டிடாது மன்னனை நீ எட்டி எட்டிப
பார்க்க நானும் நோக்க.

6. கேலி பரிகாசம்செய்ய நாணி சீதை
கேட்டுமதி வெட்கங்கொண்டு கோணி தன
துள்ளம் குளிர்ந்திடவே மெள்ளக் களிப்புடனே
போடி என்று ஓடி.

7. அந்தப்புரத்திற் சீதை சென்று கந்த
மணிந்து கண்ணாடி முன்னே நின்று தனக்
குற்ற சேடிமார்களுடன் சுற்ற நீர் தடாகம் வந்து
கூடியே நீரில் ஆடியே.

---

## 9-வது படலம்

### சீதா கலியாணம்

" மஞ்சுநிகர் குந்தளமின்னே " என்ற மெட்டு.

1. மங்கைசீதை மஞ்ச நீராடி அங்கம் மணக்க மிகப்
பொங்கிமகிழ்ந்து நங்கைமார்களுடன் தங்கியே அலங்
காரமாகவே தங்கமேனியில் வங்கிமோகன ரங்குமாலை சிருங்
காரமாக வுங்குலுங்கவே அந்தரங்கமாய் வெகு
ஆனந்தங் கொண்டு இங்கிதமாய்க் குங்குமங் கொண்டாள்.

2. வண்டுநிகர் குழலுலர்ந்து தைலம்கலந்து நன்றாய்க்
கோதிவகுந்து மின்னலைப்போல் பின்னலைக்கோர்த்து நல்ல
ஜாஜி சண்பக குண்டு மல்லிகை ரோஜா பன்னீர் சிவந்தி முல்லை
சுகந்தவாசம் வீசும் வண்ணமாய்ப் புனுகு ஜவ்வாது மணத்
திலகமுமிட்டு ஜெகமிரட்டித் துயிலுங் கட்டியே.

3. சூரியகாந்தி பச்சைக்கல்மாட்டி கதிர்கள் மீறிய
வயிரக்கம்மல்கள் மினுமினுத்திடும் ஜிகினிடீகாவும் நீல
காந்திப் பச்சைகள் மரகதம் புகழ் மாணிக்கம்பல வைடூரியங் களை
யிட்டநெற்றிப்பட்டம் தாலுகா மூக்கில் புல்லாக்கு
மஹமல் மேலாக்கு கலகலக்கக் கட்டிப்பூச் சூட்டி.

4. மெட்டியும் பீலியும் தொடுத்து காலில் கொலுசும்
இடையில் ஒட்டியாணம் மார்பில் மாணிக்கப் பதைக்கமும்
ஜெடை சிங்காரம் கொடி அட்டியல் பவுன்மாலை காரையும் [லுத்
பாஜிபந்துடன் பாட்டில் தோடா பச்சை மூக்குத்தி ஜிலுஜி [ளே
திடவேஜெகம்ஜொலித்திடவே கெல்லுகெல்லெனமெல்லவந்தா

5. மன்னர்மிஞ்சி ரஞ்சிதங் கொண்ட அண்டத்திற் புகழ்
மண்டபந்தனிற் கோதண்டபாணி வீற்றிருக்கவே தேவி
ஜானகி தனதாசை நாயக சந்நிதானத்திற் சேடிமாருடன்
கூடிவந்து நாடி நிற்கவே தேவ கந்தர்வர் பூமாரி பெய்திட
மாலை பூண்டு மணந்தாள் சீதை.

ஜயமங்களம், நித்ய சுபமங்களம்.

---

## 10-வது பாடல்

### ஸ்ரீ ராமன் வனவாசம் போகுதல்

(பட்டணவரம் பட்டணமாம்) என்ற கும்மிமெட்டு

சௌராஷ்டிர ராகம் கும்மியாகப் பாடவேண்டியது

1, அம்புவியில் தம்பதிகள் அமைந்தது கண்டவுடனே
இந்த்ராதி தேவர்களும் பொங்கிமகிழ்ந் தோங்கினரே
2, தசரதரும் யசல் கொண்டு வயசுமீறி அரசாண்டு
தனது மனம் மகிழ் புரிய தனயன்ராமன் அரசாள
3, அயோத்திமா பட்டணத்தை ஆனந்தமா யலங்கரித்து
திருவருளாய் பெற்றெடுத்த சேயவனை முடிசூட்டி
4, பட்டாபிஷேகம் படைக்க தட்டாததோர் திட்டம் செய்து
சட்டமிட்டு எட்டிவர கிட்டவந்தாள் கைகேயிமா.
5, முன்னொருக்கால் சொன்ன ஒரு சின்னவரம் தந்திடுவீர்
என்னையல்லா பின்னையொரு கன்னிகையும் எண்ணினீரோ.
6, எந்தன்மகன் பரதன் தன்னை உந்தன்சிம்மா தனந்தனிலே
ஊன்றிடுவாய் ஊக்கத்துடன் ஏங்கிடாதே எந்தன் நாதா.
7, அதுவுமன்றி ராமனையும் பதினான்கு சம்வத்சரம்
வனவாஸம் செய்திடவே ஆக்ஞை புரிந்திட்டிடுவாய்.
8. பாவிவரக்கைக் கேட்டதுமே பதிமயங்கி வீழ்ந்திடவே
பத்துநாளில் பரலோக பதமடைந்து பதவிபெற்றார்.
9. இந்தச்சேதி கேட்டுராமன் சிந்தைதனில் விந்தையில்லா
சீதையும் சௌமித்திரனும் வனவாஸம் சென்றனரே.

10. நாடெங்கும் ஓடிவாடி நாதனுடன் காடுசென்று
காடுதன்னை நாடுநிகர் செய்திடவே கூடினராம்.

11. சீரான உரிதரித்து சீதையுடன் கூடியவர்
நாடறியா ராக்கொண்டே தாஸனுடன் சென்றனரே.

---

## 11-வது படலம்

### கைகேயி தசரதனிடம் வரம்கேட்பதும் தசரதர் துக்கித்துப் புலம்பலும்

[“பாதிராத்திரிவேளையில்வீட்டுப்பக்கத்தில்வந்துமேவி” என்றமெட்டு.]

1. அறமிலங்கிய அயோத்தி நாதனும் ஆண்டுவயதினாற் கூனி ஹரி
ராமனை ராஜதானி ஆளப்
பட்டங் கட்டியே மானி பொல்லா
இகம் மறந்துமே அகம் மகிழ்ந்திட
விரும்பினான் மிக ஞானி.

2. நல்ல நாளையுங் குறிப்பிட்டுத் தன
தன்பனைப் பட்டஞ்சூட்ட நல்ல
முகூர்த்தக் காலையும் நாட்ட மேள
வாத்தியங்களை மீட்டக்கண்டு
கைகேயி மாதிடம் செய்தி சொல்லக் கூனி
சென்றனளே கோளை மூட்ட.

3. பாதி ராத்திரி யைப் பக்கத்தில்
பாதகி வந்து மேவி நான் தான்
கைகேயி யெனக்கூவி நெஞ்சில்
ஈரமில்லாத சாவி மனம்
பதைத்திட ஒரு வரத்தைக் கேட்கக் கை
பற்றி யிழுத்தாளே பாவி.

4 ராஜ்யம் என் மகன் பரதனுக்கன்றி
பூஜ்யன் ராமனுக் கல்ல ராமன்

கானகந்தனிற் செல்ல வரந்
தானருளுமே நல்ல எனக்
கல்மனங்கொண்டு பொல்லாளுரைத்தாள்
வல்லவன் றனைக் கொல்ல.

## தசரதர் துக்கித்துப் புலம்பல்

5. பண்டையிற் செய்த கருமப் பயனால்
வாய்ந்ததே பெருந்தோஷம் எவர்
சூதினால் வந்த மோசம் இனித்
துலையுமோ மகன் பாசம் இதைச்
சுற்றத்தாரறிந்தா லென்றன் முன் புகழே
செல்லுவரோ பரிகாசம்.

6. மையல்கொண் டொருக்காலம் முன் சொன்ன
வரத்திற் கிப்போது வாதோ இந்த
மார்க்கந்தோன்றின தேதோ சென்ம
வாசனைப் பல லீதோ ஐயோ
மாதம் பத்தாகச் சுமந்து பெற்றவள்
வயிறுந்தா னெரியாதோ.

7. ராமசந்த்ரனைக் காட்டுக் கனுப்பி
நானுமயோத்தி நாட்டில் நெஞ்சில்
நாணம் விட்டுத் தன்பாட்டில் ராமன்
தாகம் பசியால் காட்டில் திருந்
தலையவேண்டி முன்னடக்கமாய்த் தெய்வம்
லபித்ததோ மண்டை யோட்டில்.

8. செய்ய பஞ்சணையும் பொறாது
சிவந்து கொப்பளமாகும் நெருஞ்
சிப்பழமென்று நோகும் ராமன்
சீரடி ரெண்டும் வேகும்படி
தீயும் கானலிற் காயும் வேனலால்
நோயு முற்றியே போகும்.

9. தேடி னுங்கிடை யாததாகிய
சீதையுமனுகூலம் போல
ஜனித்த பெண்ணுக்குக் காலம் வேறு
திரும்பின தென்ன கோலம் ஐயோ
எப்படிப் பிரிந்து தனித்திருப்பேன் நான்
ஈசனே யிதென்ன ஜாலம்.

10. காடு சேர்கையில் காடி வேங்கைகள்
காட்டுமே யாரவாரம் அதைக்
காதிற் கேட்டு விசாரம் வைத்துக்
கலங்கு வீரந்த நேரம் எந்தன்
ராம நாதனை ஆதரித் துயிர்
காப்பது மீசன் பாரம்.

---

## 12-வது படலம்

இராகம் சங்கராபரணம். ஏகதாளம்.

"ஸ க ப பமகமரி நி ரி ம கம ரிக ஸா" என்ற மெட்டு.

ராதங் கள் கஜ துர க ப தா தி ஸயி ன்யங்க ளும் ம ற ந்து விட்டொழித் து உரிதரித்து மன் னன் காட் டுக் கு வன வா ஸம் போ க வும் நிச் சயி த்து ரா மனும் சீ தை யும் தா ஸ னும் கு ஹ னைக் கண்டு ஓடமேறிக் கடந்து மூவரும் கடு மலை புக பரி வா ர ஜனங் களுமே அனைவரு மகந்தனி லுருகினர்.

---

## 13-வது படலம்

### கைகேசியைப் பரதன் பழித்தல்

"பாளைவாய் கமுகில் செந்தூர்" என்ற மெட்டு

1. என்னடீ பாபி கைகேசி ஏதடீ உனக்கு எந்தன்
முன்னவன் பேரில் மிகுந்த வஞ்சமே அடி
அன்னையே னோ? ஈரமில்லா நெஞ்சமே.

2. புண்ணியன் ராமன் இருக்க கண்ணியமாயென்னை யெண்ணிப்
பிரியவிட்ட பிரியமற்ற பாதகி உன்றன்
பிறவியேனிப் பூதலத்தில் காதகி.

3. கண்ணன் ராமன் தன்னைப்போக்கி மண்ணுலகின்கண்ணே
அண்ணலாயிருக்க என்ன ஞாயமோ இது [நானும்
பெண்பிசாசின் புத்தி சம்பிரதாயமோ.

4. மன்னன்ராம நாதனுன்னை மாதே மாதே என்று மன்னி
மேவிக் கொஞ்சி கூவு நாளும் போச்சுதே மகா
பாவி யென்றுனைப்பேசி ஏசலாச்சுதே.

5. ஜானகியும் அண்ணன் மாரும் கானகத்தில் காய் கிழங்கு
தேடித்தின்று வாடிவாசம் பண்ணவோ நாமும்
கூடி நன்றாய்க் கூட்டும் சோறுமுண்ணவோ.

6. என்னையும் விவேகமில்லா வுன்னையுமே உற்றோர் கண்டால்
ஒன்றுஞ் சொல்லிடாரோ ஐயோ பாவியே அடி
கொன்றிட்டாயே தந்தையை நீ சாவியே.

7. சூரன் ராமன் மதினியோடும் தேறியூரில் புகுந்தால் மட்டும்
சோற்றி லாசை கொண்டு நானும் மீளுவேன் அன்றி
தூற்றி யுன்னை நானுமங்கே மாளுவேன்.

---

## 14-வது படலம்

### பாதுகா பட்டாபிஷேகம்

### ஸ்ரீ பரதன் கைகேயியைப் பழித்து கௌசல்யையைப் பணிந்து ஸ்ரீ ராமனைத் தேடிப்போவது

"என்னடி நான் பெற்ற மங்கை" என்ற மெட்டு

1. வண்டி என்னைப்பெற்ற தாயே வஞ்சித்தாயே வேப்பங்காயே
ஆண்டவனை வெறுத்தாயே பெரும் [போல
சண்டாளியே கண்டோர் நம்மை விண்டேபழி கொண்டாடிட
சன்ம மெடுத்தாயே பேயே நீயே
தன்புத்தி கெட்டுப் போனாயே.

2. நன்னிலை மாதரைக் கூடி மனைநாடி எனைத்தேடி எந்தன்
முன்னில் வராதே நீ போடி இந்த
தலமீதினில் நலமே பெறுங் குலபத்தினி பலபேர்களின்
சந்ததிக் கெல்லாமோர் வடுவே கொண்டு
வந்து பிறந்தாயே நடுவே.

3. சித்தப் பிரமை கொண்டேங்கி முகம் வீங்கி மதிநீங்கி மாலைப்
பெத்த கௌசல்யையைத் தாங்கி சிறு
பரதன்தன துயிர்போலவே நிரதம் நினைத் துருகி மனம்
வரதன் காணுமற் கரைந்தான் பதி
விரதையைத் தேடி விரைந்தான்.

## ஸ்ரீ தசரதன் மரணத்தை ஸ்ரீ இராமன் அறிவது

4. சித்ரகூட வனப்புனத்தில் அந்தவனத்தில் ஒரு தினத்தில் கண்டு
தேறினான் பரதன் மனத்தில் உடன்
தந்தை பர லோகம்சென்ற விந்தை புரிந்தருகே வரத்
தசரதன் சாவைக்கேட்டு இராமன்
தபித்துக் கார்த்தானே நீட்டு.

## ஸ்ரீராமன் பரதனைச் சமாதானஞ் செய்து இராஜ்யத்துக்குப் போகச் சோல்லல்

5. சூட்டிக்கொள் பட்டமும் கொடுத்தேன் ஆடை விடுத்தேன் காட்
நாட்டிலுள்ள போகம் கடுத்தேன் என்று [டை அடுத்தேன் இனி
உரிதாரணம் மருவிகொடும் அரிசூரணம் கருதிதன
துள்ளத்தில் தந்தை சொல் கணித்தான் துக்கம்
கொள்ளாமல் தம்பியைத் தணித்தான்.

## ஸ்ரீ பரதன் இராமனை நாட்டுக் கழைத்தல்

6. அண்டம் புகழ் திருமாலே செங்கோலாலே சந்திரன்போலேவந்து
அரசாளும் இனிமேலே எந்தன்
முன்னோனது பட்டந்தனைப் பின்னோ னெடுத் தரசாண்டிட
நெறியு நல் முறையாமா நானும்
வெறியனோ பரந் தாமா.

## துக்கித்த பரதனுக்கு ஸ்ரீ இராமன் புத்தி சொல்லல்

7. இப்படி யென்னாளோ அண்ணா செய்ய கண்ணா கடல்வண்ணா இனி
உண்ணவு மென்மன மெண்ணா தென
தன்சோதரபரதன் தனை அஞ்சாதறஞ் செய்வித்திடத்
தக்கதோர் மார்க்கத்தைக் காட்டி அர
சாளச் சொன்னான் செங்கோல் நாட்டி.

## ஸ்ரீ இராமன் புத்தி கூறல்

8. தர்மமே செய் பெரும்பாக்கியம் விடுபோகம் நல்விவேகம் கொண்டு
வேகமாய்ச் செய்துகொள் சிநேகம் தினம்
தோறும்பல தானஞ்செய்து வேதங்களை ஓதி வெகு
சோகங்களற்றிடத் தீர்ப்பாய் கெட்ட
மோகம்விட்டுக் கண்போல் பார்ப்பாய்.

## மறுபடி பரதன் வருந்த ஸ்ரீ இராமன் தன் பாதுகை கொடுத்தல்

9. மகாலெக்ஷ்மி மணவாளா மணிதோளா சொன்னேன்கேளா யென்
மாளா தண்ணா அரசாள என்று [னால்
போராடிய பரதன் தனை சீராய் மனந்தேற்றி உடன்
பாதுகை ரெண்டையுங் கொடுத்தான் ராஜ்ய
பாரத்தில் தம்பியைத் தொடுத்தான்.

## ஸ்ரீ பரதன் பாதுகை பெற்றுப் பட்டஞ் சூட்டல்

10. செங்கண் திருமாலைப் போற்றி துயராற்றி மனந்தேற்றி உடன்
சீர்பாதஞ் சிரசிலேற்றி வந்து
வசிஷ்டர் பல முனிவர்களை வணங்கி மனம் மகிழ்ந்து வெகு
மங்களமாய்ச் செங்கோல் நாட்டினான் ராஜ
அங்கமாய்ப் பாதுகைச் சூட்டினான்.

ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம் முற்றிற்று.

# 15-வது படலம்

## சூர்ப்பணகி அங்கபங்கமும் சீதாபஹறரணமும்

"நொண்டிச் சிந்து" அகவல்மெட்டு ["கும்மிபோலும் பாடலாம்."

1. கோடிசூரியன் போல் கோதண்டபாணி தன்
கோதையுடன் காட்டில் கோமளமாய் அங்கு
கூடித் தம்பியுடன் குடிசை யொன்றைக் கட்டி
நாடினு னேரிடம் நீர்வளமாய்.

2. சீதம்மையைக்கண்டு பூதம்போல் பெண்ணொரு
காதவழிபட நாதமிட்டாள் காம
தாகங்கொண்டு ராம பாதம் பிடித்து வி
வாஹஞ்செய்து கொள்ள வாதமிட்டாள்.

3. சூர்ப்பணகி யென்ற ராக்ஷசியாமவள்
தூர்பருத்து மலைபோல் திரண்டு மரம்
வேர் அடர்ந்தாற்போல கூந்தல் விரித்துமே
கார் ஆனை போற் பிடித்தாள் முரண்டு.

4. சாக்குரைத்தும் பின்னும் போகாமலே யவள்
வாக்குவாதம் தம்பி கேட்டிடவே அவள்
மூக்கையறுத்து முழங்கி விரட்டியே
யாக்கை பெருத்தாளை போட்டிடவே.

5. சோபக்குறை கண்டதோர் கரதூஷணர்
கோபத்தை மூட்டி முறையிடவே வெகு
தாபத்தால் வெண்கலத் தேர்களைப் பூட்டியே
சாபந் தொடுத்தார் அறை படவே.

6. சூரன் ஸ்ரீ ராமனை வில்லாலடித்திட
வீரர்போல் வந்தம்பு எய்திடவே கடுந்
தேர் பலவற்றையுந் தூள் செய்து இராமனே
போர் புரிந்தான் சரம் பெய்திடவே.

7. சொந்தவர் மாண்டதும் சூர்ப்பணகி கண்டு
சோதரனைக் கண்டுரைத்தனளே உடன்

தானடைந்த பல துன்பங்களைச் சொல்லி
ஜானகி சந்த முரைத்தனளே.

8. அன்ன நடை வெகு சின்ன இடையவள்
மின்னல் கொடி மார்பில் முல்லைச் செண்டு அவள்
சொல் கரும்புத்துண்டு செவ்விதழ் கல்கண்டு
சொன்னேனப்பா தொடை வாழைத்தண்டு.

9. உந்தனுக்கேயவள் உவமையே வெகு
அந்தம் மிகுந்து சிறந் தவளே வெகு
சுந்தரியேயவள் சந்தமென் சொல்வேனோ
உந்தனைப் பேணிப் பிறந்தவளே.

10. இராவணன் ஜானகி வர்ணனை கேட்டுடன்
இராமனை வஞ்சித்தவளைக் கொள்ள மாமன்
மாரீசனைக்கண்டு மாறுவேஷங் கொண்டு
மான்போலே போகச்சொன்னானே மெள்ள.

11. மெள்ளமெள்ள மான்போல் கள்ளமாரீசனும்
துள்ளித் துள்ளி முன் பின் தாவிடவே சீதை
புள்ளிமானைக்கண்டு உள்ளம் மகிழ்ந்திட
வள்ளல் ஸ்ரீ இராமனை ஏவிடவே.

12. கிட்டிக் கிட்டி இராமன் செல்லவே பொன்மானும்
எட்டி எட்டி மெள்ள சென்றிடவே வெகு
நேரமெல்லாம் வீணாய்ப் போக்கியே மாயாவி
தூரமாய் வஞ்சித்த கன்றிடவே.

13. ராமன் போய் மானுடன் மாறிவராமலே
தாமசமாகவே தேவிநொந்து மாய
வமாற்ற தென்ற இராமாநுஜந்தனை
ஏசி யனுப்பினளே சினந்து.

14. இவ்விதம் சீதை தனித்திடவே மிக
பவ்வியமாக லங்கேசன் வந்தான் அந்த
செவ்விதழ் சீதையைக் கண்டு மகிழ்ந்துடன்
சவ்வியமாக மடம் புகுந்தான்.

15. காவித் துயில் கட்டி கற்ற சன்யாசி போல்
கூவி மெள்ளவந்து கோதையையே கள்ளன்
மேவியடுத்து விருந்தாளி போல் பாவி
தாவிச் சென்முன் தூக்கிச் சீதையை யே

---

## 16-வது படலம்

### இராவணன் சீதையிடம் மையல்கொண்டாடி அவளை அபகரிக்க எத்தனிக்கையில் சீதை புலம்பல்.

"ஆறுமுகவடிவேலவனே கலியாணமும் செய்யவில்லை" என்றமெட்டு

1. பொன்மானுக் காசைப்பட்டுடன் நாதன் இராமனைப்
போகவிட்டுப் பிரிந்தேன் அது
மாயாவி மாரீச னென்ற என் மைத்துனன்
வார்த்தை இகழ் புரிந்தேன்.

2. ஹாசீதே ஹாலக்ஷ்மணா என்ற சத்தத்தால்
சித்தப் பிரமை கொண்டேன் அது
ஏமாற்றென்று சொன்ன இராமாநுஜன் தன்னை
ஏசியே நானும் விண்டேன்.

3. கானகத்தி லாடிக் கூடிக் குலாவியே
போனதோர் மான்பழியே அந்த
மானுக் காசைப்பட்டு நானும் விழுந்தேனே
மானங் கெட்டுக் குழியே.

4. அக்கரைக் காரர்க்கு புத்தி கொஞ்சமென்பா
ராரும் பழவிதியே சின்னச்
சர்க்கரைக் கட்டியைக் குக்கல் கொண்டோடும்போல்
சார்ந்தது என் கதியே.

5. அன்புக் கடல்போன்ற தம்பிக்கு நான் செய்த
வம்பு அதிசதியே இந்தத்
துன்பத்திட லேறி இன்பனைப் பிரிந்தேன்
தொல்லைத் தலை விதியே.

6. ஆரடா ! கூறடா ! சோர ! நீ தேறடா
இப்போதே விட்டிடுவாய் அல்லால்
ஆதிமூல ரகுராம ராஜன் கண்டால்
அப்போதே பட்டிடுவாய்.

---

## 17-வது படலம்

### மறுபடியும் சீதை தன்னை நோந்து வனத்தைப்பார்த்துப் புலம்பி அசோகவனம் வருதல்.

“ மூசுவண்டு வாசமுண்டு ” என்ற மெட்டு

1. மாமலைகாள் தாரிலைகாள் மான்மயில்காள் வான்குயில்காள்
மலையுமென்னைக் கண்டு மனங்கரை வீர்களே சற்று
கலையறிந்து துலையில் சென்றுறை யீர்களே எந்தன்
தலையைக்கண்டுமே நிலையறிந்துமே
புலையில்வந்தவன் வலையில் சிக்கவே
அலைபோல் மேவிக்கொண்டோடு மிக்கொலை பாதகன் நான்
கலைத்துலைத்துமே தொலைய வில்லையே காதகன்

2. வானம்பாடி (1) நானமாவே (2) கானம்மேவும் (3) சூனமே என்
தானம் சென்று இராமனிடஞ் சொல் வீர்களே அன்றி
வானமேகி (4) தேனணிவனைக்கொல் வீர்களே ஒரு
பெண்டு தேடியே கண்டு கொள்ளவே
ரெண்டு சோதரர் அண்டி வருகவே
கண்டமா லைத்துண்டு காட்டுவீர் நேசமாய் நான்
தண்டனிட்டேன் ஒப்புவீர் விசு வாசமாய்.

3. ஞானவான்போல் மோன முற்று
(5) வான மேறிக் கான மேவி
மானங்கெட்ட ஈனனென்னைத் தூக்கியே ஒரு
மீனைக்கண்ட (6) சேனம்போலவே தாக்கியே வெகு
அற்பனுயினும் கற்பழிக்கா
துய்ய மண்ணுடன் பையத்தூக்கி—அ

சோகவனம் நோக்கி வேகமா யோடினன் காமத்
தாகங்கொண்டுமே என்னை மேவியே வாடினன்.

## 18-வது படலம்

### அசோகவனத்தில் சீதை புலம்பல்

" மஞ்சுநிகர் குந்தள மின்னே " என்ற மெட்டு

1. மாலை மணந்துள்ளம் மிகுந்து
விவாஹமாகி அயோத்திசென்று
மாமிநகர் வந்து புகுந்து உடன்
பாசமற்றகை கேகிமா தெந்தன்
நேசனை வன வாசம் செய்யவும்
பாலன் பரதன் பட்டமாளவும்
பதினன்கு வருஷம் பதிபோகம் விடுத
போய் வரச் சொன்னளேமீளவும்.

1. நாணமா = கவரிமா
2. கானம் = காடு—பாட்டு
3. சூனம் = பூங்கொத்து—மான்
4. தேனன் = திருடன்
5. வானம் = ஆகாயம்
6. சேனம் = பருந்து

2. கொஞ்ச வயதான பருவம்
தன்னி லெனது சித்தம் மகிழ்ந்து
மிஞ்ச பங்கமாச்சு தென் கருவம் உடன்
கானகம் வந்து மானைக் கண்டதும்
ஞானமும் கெட்டுப் போனதே எந்தன்
காலமோ பெண்புத்தி யோசனையோ
மலரோன் கற்பனையோ மாமிசற்பனையோ அன்றி
கா்மமோ முன் ஜன்ம வாசனையோ.

3. கோரமான ராக்ஷசர் கூட்டம்
மலைபோல் பூரித்து அலைபோல சீறி

வாரம் தோறும் வந்து போராட்டம் பிணி
பிடுங்குதே உடல் ஒடுங்குதே கால்கை
நடுங்குதே இவர்களுஞ் சொல் சோஷத்தி
ஞாவாரம் எல்லை இல்லையோ
சகியே திரிசடையே சகியேன் ஒரு நிமிஷம்
ஆறுதில்லை என்ன தொல்லையோ.

4. என்ன செய்வேன் எந்தன் விதியோ
அதி விருப்பத்தால் சதியடுத் தேனே
மன்னன் காண என்ன கதியோ என
தங்கமே குண தங்கமே துரைச்
சிங்கமே எனை எங்கு தேடுவாய்
இங்கு வாராய்ப பிராணபதியே
மதிமருளுதே கதி இருளுதே
சங்கை தீராய் கேட்டேன் துதியே.

5. எத்தனை நாள் நானும் பொறுப்பேன்
மன்னன் ராமனை இன்னும் காணாது
ஏனோ? எந்தனுயிர் வெறுப்பேன் என
ஏகமாக வசோக விருக்ஷத்தில்
வேகமாய் வந்து சோகம் கொண்டவள்
சாகவே சென்றாள் சீதாபிராட்டி
அந்தப பக்கத்தில் அநுமான் நிற்கவே
சாகை மேற் கண்டாளே சீமாட்டி.

அன்பளிப்பு

---

## 19-வது பாடல்

### இலங்கா தகனம்

"செந்தில்மா நகரந்தனில் மேவிய" என்றமெட்டு.

1. இலங்கைமா நகரந் தன்னில் மேவிய
இராக்ஷசனு மொரு வீணன் அவன்
இராவணனும் தசை யூணன் காம
தாகம் மீறியே மோகங்கொண்டவன்

தோகை சேர்ந்திட வேகமாய்ச் சென்ற
சோகவனத்துக் கேகியே சீதையின்
அங்கம் மணக்க மிகப்பறந்தான் அவள்
அக்கினி யென்றதையே மறந்தான்.

2. தையலே மாரன் எய்யுங்கணை தன்னால்
மையலும் மீறுதே யென்றிட—துணிந்
தைய மின்றிக் கிட்டிச் சென்றிட கொடு
தாபங் கொண்டவள் பாபி ! ராவணா ! !
சாப மிட்டிடு வேனடா வெனத்
தாவியே துச்சன் அச்சங் காட்டிப் பல
பயங்கர ரூபங் கொண்டாடினான் ஒன்றும்
பயன்பட மாளாது வாடினான்.

## சீதை இராவணனைத் தூஷித்தல்

3. பாதகா ! உனக்கே தகந்தை யுந்தன்
ஜாதக சௌர்யங் குறைந்த தடா கொலை
பாதக வீர்யம் நிறைந்த தடா வென
ஓதவே அந்தப் பாதக அரக்கனும்
ஆதவன் கண்ட பனியைப் போலவே
போதுமே இந்தப் பொல்லாச் சொற்காய மென்
றோடியே வெட்கி அகத்திற் சோர்ந்தான் உடன்
தேடியே மாருதி வந்து சேர்ந்தான்.

## அனுமார் மோதிரம் கொடுத்தல்

4. அநுமானவன் பக்த சிகாமணி
அம்மையைத் தேடிங்கு நாடினான் துணிந்
தப்பனுக்குப் பணிந் தோடினான் தூதன்
தேவியைக் கண்டு தேகம் பூரித்துச்
சேவித்தானவன் தாசன் மாருதி
அம்மணீ ! உனைத் தேடித் திரிந்தேனே
அஞ்சாய் ! மகிழ்ந்தேனே தஞ்சமே பாரும்
அன்புடன் மோதிரம் கொஞ்சமே.

5. ஜானகி அந்தக் கணையாழி கண்டதும்
ஆனனம் சேர்த்ததை முத்தினளே மனத்
தானத்தில் வைத்துப் பொருத்தினளே உடன்
மங்கை ஜானகி மகிழ்ந்து சூடா
மணியை மாருதிவசமே தந்தவள்
இந்தாடா எந்தனன்புள்ள தூதா நீ
இப்பவே போ என்றாள் வீரனிடம் உடன்
செப்பிடுவாய் சேதி தீரனிடம்.

6. அந்த நேரமே வந்தனம் செய்து போய்
நந்தவனத்தை யழித்திடவே கண்டு
சொந்தவன் முன்புக் கிழித்திடவே சொன்னான்
கள்ள ராக்ஷசப் பையலே அந்த
வள்ளல் சீதையைக் கொள்ளை கொண்டவன்
துள்ளாதே துஷ்ட மிலேச்சப் பையல் சுடும்
பத்துத் தலை பெற்ற ராவணனே கடும்
கொத்துக் கொத்திப் போவர் நாரணனே.

7. ஓட்டுவாய்? உந்தன் மேட்டிமை! யாரிடம்?
காட்டுவாயோ? சீதாப்பிராட்டியிடம் உந்தன்
காதலைக் காட்டுன்பெண்டாட்டி பிடம் மன்னன்
தசரதன் மருமகளையா அடா!
தசமுகன் கருமணந்திட
சீச்சீ போ! நாயே பேயே பிசாசமே
சீலங்கெட்டாய் நீ படிந்திடவே அலங்
கோலப்பட்டு நீ மடிந்திடவே.

8. வானரன் துஷ்ட ராவணனைக் கண்டு
வாள்நிகர் சொல்லா லறுத்திடவே அவன்
வாலில் தீவைத்துப் பொருத்திடவே உற்ற
சமய மிதுவென நகர முற்றிலும்
தகனஞ் செய்திடத் தீயை மூட்டிப் பின்
தாண்டியே கடல்கடந்து வந்து தன
தன்புள்ள நாதன் பாதம் பணிந்து கண்டேன்
தங்கம் போல் தேவி யென்றான் துணிந்து.

# 20-வது படலம்

## இராவண ஸம்ஹாரம்

"செந்தூர் வளர் முருகநாதா அருளைதய" என்ற மெட்டு.

1. அந்தஞ்சி றந்தருள்ச மேதன் அருளைதயச்
செந்தாம ரைநிகரும் பாதன் அந்தச்
சொந்தமான மாருதியுஞ் சொன்னதொரு சேதி கேட்டுக்
கண்ணன்க ருணைகர நாதன் களித்தானந்தக்
கண்ணீர்பெ ருக்கக்கண்டான் தூதன்.

2. தக்க வானராதிகள் கூடிப் படையெடுத்து
அக்க ளிப்புடன் லங்கை யோடி அங்கு
பக்க நின்ற பஞ்சசேனை மன்னரைப்ப டுத்தி வென்ற
ரக்கரைத் துரத்தியே ஓடி உறைத்து நன்றாய்த்
தொக்க லங்கே சந்தனை நாடி.

3. வீணன் இராவணன் தன்னைக் கண்டு கோதண்ட பாணி
பாணந் தொடுத்துத் தலை விண்டு வேந்தன்
ஈரஞ்சுசி ரங்களையும் ஈர்பத்துக்க ரங்களையும்
கண்டங் கண்டங்களாகத் துண்டு துண்டுகளாக்கிச்
சண்டப் பிரசண்ட ஜயங் கொண்டு.

4. தீரங் கொண்ட ராமாவ தாரம் சிஷ்டருக்குப
காரம் தசக்ரீவன் சம் ஹாரம் முடிந்
த்ரா வாரத்துடன் புஷ்ப மாரி சுக வாரி பெய்ய
நாரி மணியைக் கண்டு தேறி மனத்தில் ஜய
பேரி அடித்தா னுள்ளம் மீறி.

## ஸ்ரீ விபீஷணப் பெருமாளுக்குப் பட்டஞ் சூட்டி ஸ்ரீ இராமன் அயோத்தி போவது.

5. பக்தன் விபீஷணனுக் கென்றே லங்கையைச் சூட்டித்
துக்கம் தீரச் சீதையை அன்றே புஷ்ப
விமானத்தில் வீற்றி இராமன் வீரதாஸ லக்ஷ்மணனும்

வான மார்க்கமாய் போக நன்றே உரைக்க ஹநு
மானந்தப் பரதன் முன் சென்றே.

6. சுத்தன் இராம சந்த்ரனை நித்தம் நினைத்துத் தம்பி
சித்தம் கலங்கி மெத்தப் பைத்யம் கொண்டு
அண்ணன் வரக்காணுமலே அக்கினி வளர்த்து விழ
எண்ணம் கொண்டிட ஹநு மானே இரைந்தானதோ !
கண்ணன் ! பார் ! வாரார்பக வானே.

## ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம்

7. கண்டுமன மங்களித்து ரெண்டு கரங்கள் கூப்பித்
தண்டங்க ளிட்டானெதிர் கொண்டு உடன்
மேளதாள கோஷத்துடன் வேளைபார்த்து இராஜ்யமர
சாளக் கோலத்துடனே கூடி ஜானகி மண
வாளன் தங்கக் கிரீடம் சூடி.

## ஸ்ரீ இராமர் இராஜ்ய பார மஹிமை

8. வேதம் அந்தணர் கூற மாதம் மும்மாரி தூற
மோதம் நெறிதவரு நீதம் அப
வாதமற்ற இராம சந்த்ரன் சீதம்மைப்பி ராட்டியுடன்
பேதம் விவாதமப ராதம் அற்ற தோர் கீர்த்தி
நாதம் பெற்ற ஸ்ரீ தர்ம பாதம்.

## சிந்து பாடினவர் ஊரும் பேரும்

9. சாரம் அகஸ்தியர்மலை வாரம் பாபவிநாச
ஓரம் தாம்ப்ரபர்ணித் தீரம் வாழும்
உற்றோர் பொல்லார் கற்றோர் கல்லார் பெரியோர் சிறியோர்க்
கெல்லாம்
நேசன் திருமலையோன் பாசன் சுப்ரமணிய
தாசன் அம்மைமாநகர் வாசன்.

சிந்துகளிற் சிந்தினதோர் சொற்பிழைகளைத் சிறந்தோர்
சினக்காது மன்னிக்கச் சிற்றறிவோன் பிரார்த்தனை.

10. அற்புதமான சீதை கற்புக் கதை யெடுத்து
நற்புகழ் சிந்து இராமன் காப்பு தாசன்
சுப்பு சாமி செப்பினேனே அப்பன் இராமன் நற்பதங்கள்
தப்பு தமிழ் பிழைக லட்பு இருந்தாலுமே
ஒப்புக் கொடுத் தருள்வீர் மாப்பு.

### நூற்பயன்

சிந்துவைப் படிப்போரென்றுஞ் சீரான செல்வம் பெற்று
இந்திர லோகஞ் சென்று இனிதுவீற் றிருப்பர் மாதோ.

### வாழி

மாதம் மும்மாரி பெய்ய வையக மாண்டோன்வாழி
வேதத்திற் கப்பானின்ற விண்ணவன் வாழி வாழி
நீதங் கடவறி நின்ற நிருதனை யழித்தோன் வாழி [வாழி.
பாதங்கள் பணிவோர்க்கென்றும் பதத்தையே யருள்வோன்

ஜயமங்களம் நித்ய சுபமங்களம்.

ஸ்ரீ இராமாயணச்சிந்து முற்றிற்று

---

## ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி லீலைக் கும்மி

ராகம் டோம்ரி பைரவி—ஏகதாளம்

### பல்லவி

கூட்டிவாடி நீல மயிலே சோலைக்குயிலே
பாலகிருஷ்ண னெங்கடி. (கூட்)

### சரணங்கள்

I. வீடுபுக வெண்ணையு முண்டு பெண்ணையுங் கண்டு
கண்ணன் மறைந் தானடி

மாலைப் பொழுதினில் பாலை யெல்லாம்
எட்டியே வந்து திட்டமதாக ஓட்டக் குடித்திடுவன்.

1. மத்தடி பட்டாலும் எத்திடுவன் மெத்தவுங் கள்ளனவன்
2. உள்ளே வந்து குள்ளநரிபோல மெள்ள நின்று பறிப்பன்
3. மெட்டு மேலிட்டிடும் சட்டிகளைக் கொட்டி யுருட்டிடுவன்
நந்தகோபால நவனீத சோரனைப் போய்க் [கூட்]

II. கையைத் தட்டிக் கண்ணைச் சிமிட்டி என்னைமிரட்டி
அன்பு புகட்டிடுறேண்டி
வந்திடுவே னென்று தந்திரமாய் [டான்
எத்தனையோ பொய் சத்தியம் செய்து எத்தித்தனிக்கவிட்

1. கன்னியர்சேலை கரையிலிட்டு அந்நியர் காணுமல் முங்கையிலே
2. சின்னமரமேறிச் சேலையுடன் உன்னதமாகச் சிரித்தானடி [முற
3. அம்மணமாய்நின்ற பெண்மணிகள் பெம்மானைக்கண்டுடன்வெட்க
தென்படவே நின்று கும்பிடச் சொன்னேனைப் போய்க் [கூட்]

III. அந்தியிலே சந்துக்கு வந்து முந்திபிடித்து
குந்திவிளையாடிடுறேன்
நந்த கோபன் அவன் மந்த காசன்
சந்திர பிம்ப இந்திரசால தந்திரவாதி யவன்.

1. கன்றுக் கூட்டங்களை காற்றிடவே குன்றைக்குடை பிடித்தான்
2. வேணுவைக்கையில்பிடித்துமவன்கோணிக்கொண்டுநின்றுபாடிடு
3. காளிங்கனென்றகொடும் பாம்பை தாளால் முடி நடித்தான் [வன்
வேணு கோபால விநோத சுலீலனைப் போய்க் [கூட்

மங்களம்

முற்றிற்று.

அரசன் வாழி—பாண்டு.

“ ஆதிமூலமான விக்கினேசுவரா நமோ” என்ற மெட்டு.

## CHORUS.

Long live ye oh ! King of England !
Emperor of our land—May
God bless Thee oh ! George of England !
Emperor of our land.

I. Let Thy Rule in Indian Empire
Be happy oh ! Sire ! and
Let the flag of British Empire
Wave always oh ! Sire ! (Long).

II. Loyalty is India's Motto
Unity the goal—May
Peace prevail in Indian Empire
Long thy sway may roll. (Long).

III. Unique is thy Crown at Delhi
Unique be thy Reign—May
Unique be thy boons to India
Unique so to shine. (Long).